விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லாண்
சிமெந்து (O.P.C.) ராம்கோ சிமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 15 வியாழக்கிழமை (28.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 099

## ஐ.நா.தீர்மானம் குறித்து இந்தியாவுடன் ஆலோசிக்கப்பட்டது

### றொபேர்ட் ஓ பிளேக் தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து இந்தியாவுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டதாக அமெரிக்க துணை ராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளக் தெரிவித்துள்ளர்.

தீர்மானம் தொடர்பான யோசனை சமர்பிக்கப்பட்டது முதல் இந்தியாவின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் சில திருத்தங்களையும் ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெற்றதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதே பொருத்தமானது எனவும், இலங்கை மீது இந்தியா (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத்துக்காக பொதுவாக்கெடுப்பு

### தமிழக சட்டசபையில் தீர்மானம்



(சென்னை)

தமிழீழத்தை உருவாக்குவது தொடர்பாக இலங்கைத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழக சட்டசபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழகத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மாணவர்கள் போராட்டம் பற்றிச் சிறப்பு விவாதம் நேற்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து சட்டசபையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது கடதாசிப் புலி...!

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை, ஒருகடதாசிப்புலிஎன்றுயூரோ ஏசியா என்ற சர்வதேச அரசியல் விமர்சகர்கள் குழு விமர்சித்துள்ளது.

முதலில் சர்வதேச விசாரணை என்றும், பின்னர் உள்நாட்டில் விசாரணை (20ஆம் பக்கம் பார்க்க)

## மயிரிழையில் தப்பிய சிறிலங்கன் விமானம்

(கொழும்பு)

புதிதாக திறக்கப்பட்டுள்ள மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் ஒன்று பாரிய விபத்தில் இருந்து மயிரிழையில் தப்பியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மாலேயில் இருந்து இலங்கை வந்த யு.எல் -114 (19ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பரவலாக்கலுக்கு பெரும்பான்மை ஆதரவு தேவை

### பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் அதிகாரங்களை பரவலாக்க வேண்டுமாயின், சர்வதேசம் மற்றும் புலம் பெயர் புலிகளுக்கு தேவையான வகையில் அல்லஎனவும் இலங்கையில்வாழும் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கு அமையவே அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போருக்கு பின்னர் அதிகாரப் பரவலாக்கம் குறித்து சிலர் பேசுகின்றனர். இது தொடர்பாக சர்வதேச நாடுகள் இலங்கைக்கு ஆலோசனை வழங்குகின்றன. அழுத்தங்களை கொடுக்கின்றன.

தமிழக அரசியல் வாதிகள் அங்கிருந்து கொண்டு சத்தமிடுகின்றனர். அவர்கள் எப்படி இலங்கையில் அதிகார பரவலாக்கம் குறித்து பேச முடியும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு, ஜனாதிபதியும்,அரசாங்கம்அதிகாரத்தை பரவலாக்கினால், அதுநாட்டின்பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கு அமையவே மேற்கொள்ளப்படவேண்டும்.

நாட்டில் இருப்பது ஜனநாயக ரீதியிலான ஆட்சி, இராணுவம் சூழ்ச்சியில் ஆட்சியை பிடித்திருக்கவில்லை. (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடு தழுவிய ஹர்த்தாலுக்கு எதிர்க் கட்சிகள் அழைப்பு



(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி அதனூடாகப் பொறிமுறையொன்றை வகுக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையை அரசு நிராகரித்துள்ளதால் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் ஹர்த்தால் நடவடிக்கைகளில் ஈடுபடப் பொது எதிர்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இந்த ஹர்த்தால் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மக்களை அணி திரட்டுவதற்காக எதிர்வரும் 31-ம் திகதி கண்டியில் மாபெரும் பொதுக்கூட்டமொன்றை நடத்த பொது எதிர்க் கட்சிகள் ஏற்பாடு செய்துள்ளன என்று அதில் அங்கம் வகிக்கும் நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்பர் என்றும் அவர் தெரிவித்தார். (எ-11)

## புலிகளின் மூத்த தளபதிகள் பலர் வெளிநாடுகளில் உள்ளனர்!

### பாலச்சந்திரனின் மெய்ப்பாதுகாவலர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈழத்தில் இருந்து வெளியேறிய நாங்கள் தற்போது ஒன்று சேரத் தொடங்கி விட்டோம். முக்கிய மூத்த தலைவர்கள் பலர் உயிருடல் இருப்பது எங்களுக்கே இப்போது தான் தெரியவந்துள்ளது என பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனின் மெய்ப்பாது காவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் இராணு வத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தும்படம்சமீபத்தில் வெளியாகிஉலகம்முழுக்கபரபரப்பை ஏற்படுத்தியது. அவரது பாதுகாவலர்களில் ஒருவர் பாலச்சந்திரன் கொல்லப்பட்டது தொடர்பாக சில புதிய தகவல்களை வெளியிட்டார்.

பாலச்சந்திரனுக்கு 5 பேரை பாது (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டன் அதிகாரியுடனான அரச அதிபரின் சந்திப்பு ரத்து

(கொழும்பு)

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரியுடனான யாழ்.மாவட்ட அரச அதிபரின் சந்திப்பு ரத்து செய்யப்பட்டதாக மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரி நீல் கோம்ரன் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

இதன் போது மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகத்துடன் சந்திப்பொன்றினை மேற்கொள்ளவிருந்தார். எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் மாவட்ட செயலாளருடனான சந்திப்பு இடம் பெறவில்லை என மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தத் தூதுக் குழுவினர் யாழ்.பிரதேசத்தின் நிலைமைகள் குறித்து நேரில் ஆராய்ந்துள்ளனர். அத்துடன் அச்சுவேலி வளலாய் பகுதிக்குச் சென்று பிரதித் தானிய அரசாங் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தூதரை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்

### மன்மோகனுக்கு வைகோ கடிதம்

(சென்னை)

இலங்கைத் தூதர் பிரசாத் காரியவாசத்தை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று கோரி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கடிதம் எழுதியுள்ளார்.


இது குறித்து மதிமுக வெளியிட்ட செய்திக் குறிப்பில், இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம், தன்னுடைய மின்னஞ்சல் மூலம் ஈழத்தமிழர்களுக்கு எதிராகவும், கொடியோருக்கு ஆதரவாகவும், இந்தியாவில் உள்ள ஒரிசா, வங்காளம் உள்ளிட்ட வட இந்திய மாநிலங்கள் செயல்பட வேண்டும் என்று அக்கிரமமான ஆலகால விடம் தோய்ந்த ஒரு அறிக்கையை, மார்ச் 19-ம் திகதி தயாரித்து, கொழும்பில் உள்ள ஊடக மையத்தின் மூலம், இந்தியாவில் உள்ள ஊடகங்களுக் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் தமிழர்களுக்கு தீர்வாக அமையாது

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வட மாகரண சபைத் தேர்தல் என்பது தமிழர்களுக்கு நிரந்தர தீர்வாக அமையப் போவதில்லை. எனினும் நாம் தேர்தலில் போட்டியிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். தமிழ் மக்கள் அரசினையும், அரசின் கூட்டாளிகளினையும் வெறுக்கின்றனர். தமிழ் மக்கள் சுய ஆட்சியினை கோருகின்றனர் என சர்வதேசத்திற்கு இத் தேர்தல் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

வடமாகாண சபைத் தேர்தலினை இழுத் தடிப்பு செய்து அதனை பெரிதுபடுத்திக் காட்டி சர்வதேசத்தின் மத்தியிலும், மக்கள் மத்தியிலும், பெரியதொரு எதிர்பார்ப்பினை வடக்கு மாகாண சபைத் தேர்தல் ஏற்படுத்தியுள்ளது.

நாம் இத் தேர்தலில் போட்டியிடாவிட்டால் கொடுத்த வாய்ப்பினையும் தவறவிட்டனர் என சர்வதேசம் கூறும். போட்டியிட்டு வெற்றி பெற்றால் மாகாண சபையின் அதிகாரங்கள் முழுவதையும் அபகரித்துவிட்ட அரசின் முன்னால் சரியான நிர்வாகம் செய்ய முடியாத நிலை யேற்படும்.

இவ்வாறு இருபக்கமும் எது நடந்தாலும் அது தமிழர்களின் தீர்வாய் அமைந்து விடப் போவதில்லை. எனினும் நாம் இத்தேர்தலில் சாதிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இத்தேர்தலின்போது நாம் பல சவால்களை எதிர்நோக்கலாம். ஆயுத அரசியல் கட்சிகளின் ஆள்பலம் வாக்காளர்களினை விலைகொடுத்து வாங்கும் அரசாங்கம் என பல வழிகளில் அடக்குமுறைகள், வன்முறைகள் என்பன இடம்பெறும்.

சர்வதேசத்திற்கு எமது பிரச்சினையை இத் தேர்தலில் மூலம் மீண்டும் எடுத்துக் காட்ட வேண்டும்.

வட மாகாண சபைத் தேர்தல் எமது விடிவுக்குரிய பாதையல்ல. அதனையொரு கருவியாக எடுத்துக் கொண்டு செயற்படல் வேண்டும்.

இதனைப்புரிந்து கொண்டு ஒவ்வொரு தமிழனும் சிந்தித்து செயற்பட்டால் தீர்விற்கான பாதையினை நோக்கி செல்ல முடியும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கோத்தபாஜ ராஜபக்ஷவும் தமிழர்களிற்கு தீர்வினை வழங்குபவர்கள் என்றிராமல் இனியாவது உலகம் கண்களைத் திறக்க வேண்டும்.

இனியும் தலையிடாவிட்டால் உலக வரைபடத்தில் இலங்கையில் தமிழ் இனம் என்பது இல்லாது போய்விடும் என்றார் அவர். (எ-4)

# ஆஸி செல்ல முயன்ற 97 பேர் கைதாகினர்

(திருகோணமலை)

சட்டவிரோதமாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயற்சித்த இலங்கையர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை கடற்பரப்பில் நேற்று அதிகாலை 97 பேர் கைதுசெய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் 39 ஆண்கள், 18 பெண்கள், மற்றும் 40 சிறுவர்கள் அடங்குவதாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டோர் தற்போது ஒலுவில துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (எ-11)

# சிங்களவரின் உரிமையை பாதுகாக்க இந்தியா அக்கறை கொள்ள வேண்டும்

## இலங்கைத் தூதுவர் பிரசாரம்



இலங்கையிலுள்ள 75 சதவீத சிங்கள சமூகத்தினர் ஒடிசா மற்றும் வட இந்திய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதில் தான் இந்தியா கவலைப்பட வேண்டும்.

இவ்வாறு வட இந்தியத் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் இரகசியப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஜெனிவா ஐநா மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் கடந்த 21ஆம் திகதி இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்கு முன்னதாக டில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் இலங்கைக்கு சாதகமான ஆதரவை இந்திய ஊடகங்கள் மூலம் பெறும் முயற்சியில் ஈடுபட்டார்.

சிங்களவர்கள் வட இந்தியாவை பூர்வீக மாகக் கொண்டவர்கள் எனக் குறிப்பிட்டு அனுப்பிய ஈமெயில்தகவல்கள்தற்போதுவெளியாகியுள்ளது.

அந்த ஈமெயில் தகவலில்,

12 சதவீத தமிழ் மக்களுக்காக இந்தியா கவலை கொள்கிறது. ஆனால், இலங்கையில் உள்ள 75 சதவீத சிங்கள சமூகத்தினர் ஒடிசா மற்றும் வட இந்திய மாநிலங்களை சேர்ந்தவர்கள். அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்தியா கவலைப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

பிரசாத் காரியவாசத்தின் ஈமெய்ல் முகவரியில் இருந்து இலங்கையை தலைமையிடமாகக் கொண்ட தனியார் ஊடக மக்கள் தொடர்பு நிறுவனத்திற்கு கடந்த 19ஆம் திகதி இந்த ஈமெயில் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த நிறுவனம் மூலம் இந்த ஈமெயில் டில்லியில் உள்ள ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (எ-11)

# தேசத்திற்கு மகுடம் கண்காட்சி முஸ்லிம் மக்களால் புறக்கணிப்பு

அம்பாறையில் தற்போது இடம்பெற்றுவரும் அரசின் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை கிழக்கு முஸ்லிம்கள் முற்றாகப் புறக்கணித்துள்ளதால் அந்த மாவட்டத்தின் முஸ்லிம் மாணவ, மாணவிகளைக் கொண்டு அந்தப் புறக்கணிப்பை முறியடிக்க அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதற்கமைய நேற்றுப் புதன்கிழமையும், இன்று வியாழக்கிழமை அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளில் இடம்பெறவிருந்த பரீட்சைகளை நிறுத்துமாறும், பாடசாலைகளுக்கு மாணவர்களை வரவழைக்குமாறும் பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

அத்தோடு, காலையில் இந்தப் பாடசாலைகள் அனைத்துக்கும் இராணுவத்துடன் பஸ்கள் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்துள்ள கல்வி அமைச்சு, அந்த பஸ்களில் மாணவர்களை ஏற்றிக்கொண்டு தேசத்திற்கும் மகுடம் கண்காட்சிக்கு செல்லுமாறும் பணித்துள்ளது என்று அந்தப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

முஸ்லிம்கள் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியைப் புறக்கணித்துள்ள நிலையில், தங்களது பிள்ளைகளையும் அங்கு செல்ல அனுமதிக்க மாட்டார்கள் என்பதனால் முன் கூட்டியே இந்த விடயத்தை மாணவர்களிடம் தெரிவிக்க வேண்டாம் என அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அந்தப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கண்காட்சி இடம்பெறும் இடத்தில் முஸ்லிம் வர்த்தகர்கள் வர்த்தகக் கூடாரங்களை அமைப்பதில் இருந்தும் விலகி தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (எ-11)

# குழுக்களிடையே மோதல் வாள் வெட்டில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் இரண்டு முஸ்லிம் குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற வாள்வெட்டு மோதல் சம்பவத்தில் முஸ்லிம் வியாபாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் ஓட்டுமடம் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியை சேர்ந்த அப்துல் காதர் நவாச் (வயது 54) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே பலியானவராவார்.

படுகாயமடைந்த குறித்த நபர் நேற்று மாலை 6 மணியவில் யாழ். போதான வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி நேற்று இரவு 8.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (எ-11)



நாகரிகமான முறையில் முறையான ஆடைகளை அணிந்து நீதிமன்றில் ஆஜராகுமாறு பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகாவுக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று ஆலோசனை வழங்கியது. நீதிமன்றம் சென்ற ஹருணிகா அங்கிருந்து திரும்புவதைப் படத்தில் காணலாம்.


## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## காணி, வீடு விற்பனைக்கு

வீடு — **உடுப்பிட்டி**
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு அண்மையில் 2¾ பரப்புக்காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
(NRE/H/022)

காணி — **மல்லாகம்**
மல்லாகம் கே.கே.எஸ் வீதியில் 5பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு கடை கட்டுவதற்கு பொருத்தமான காணி.
(NRE/L/018)

வீடு — **நல்லூர்**
நல்லூர் கோயில் வீதியில் ஒரு பரப்புக்காணியுடன் சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு விற்பனைக்குண்டு.
(NRE/H/019)

வீடு — **சங்கானை**
சங்கானை மாலியத்தை அம்மன் கோயிலுக்கு அண்மையில் 2¾ பரப்புக்காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
(NRE/H/017)

தொடர்புகளுக்கு:

ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate

காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்

26D. பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## விதியின் பயன்

நாம் "ஒரு செயல் நடக்க வேண்டும்" என்று ஆசைப்படுகிறோம்– ஆனால், அது நடைபெறுவதில்லை.

நாம் "எது நடக்கக்கூடாது" என்று ஆசைப்படுகிறோமோ – அது நடந்து விடும்.

இதற்கு எதைக் காரணமாகச் சொல்வது?

இதற்குத் தான் சில பேர் "விதி" என்று பேர் வைத்துள்ளார்கள். எமது விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடந்து விட்டால் அது "விதி" என்ற பெயரில் சுலபமாக சொல்லப்படுகிறது.

ஒரு சமயம் தேவலோகத்திலே நாராயணனும் லட்சுமி தேவியும் மிகவும் உல்லாசமாக அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

பூலோகத்திலே நடப்பவை அனைத்தும் அவர்களுக்குத் தெரியும். அந்தச் சமயம் பார்த்து இங்கே ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். உணவு கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு ஒரு தனி இடத்திற்குப் போனான். அங்கே அமர்ந்திருந்து உண்பதற்கு முன்னர், கடவுளை நினைத்தான். "நாராயணா... நாராயணா" என்று நிவேதனம் செய்து விட்டு உணவை உண்ண ஆரம்பித்தான்.

தேவலோகத்திலே இருந்த லட்சுமி தேவி இதைப் பார்த்து விட்டு நாராயணனிடம்... சொன்னாள்...

"அதோ பார்த்தீர்களா? உங்களுடைய பக்தன் அவன் தினமும் பிச்சையெடுத்து உணவு உண்பதற்கு முன்னர் முதலிலே உங்களுக்கு அர்ப்பணித்து விட்டுத்தான் சாப்பிடுகிறான். அப்படியான உங்கள் பக்தனை பிச்சையெடுக்க விட்டுள்ளீர்கள். இது நியாயமா? அவனுக்கு சற்று செல்வத்தை வழங்கி வசதியாக வாழ வைக்கக் கூடாதா?" என்று கேட்டார். இதைக் கேட்ட நாராயணன் சிரித்தார்.

அதன்பின் கூறினார்... இவன் முற்பிறவியிலே செல்வந்தனாகத்தான் இருந்தான். அப்போது யாருக்குமே இட்டு ஈயவில்லை. அதனால்தான் இப்பிறவியிலே கஷ்டத்தை அனுபவிக்கிறான். அது அவனுடைய விதியின் பயன்" என்றார் கடவுள்.

"என்ன கூறுகிறீர்கள்? விதியா... நாம் நினைத்தால் எது முடியாது? இப்போது நான் அவனுக்கு உதவி செய்யப் போகிறேன்" என்றார்.

"என்ன உதவி?" என்று கேட்டார்.

"அவனுக்கு சிறிது செல்வம் கொடுத்து கஷ்டத்திலேயிருந்து காப்பாற்ற போகிறேன்" என்றார்.

"சரி செய்து பார்" என்று கடவுள் கூறினார்.

உடனே லட்சுமி தேவி... ஒரு பண முடிச்சை பூலோகத்திலே அந்தப் பிச்சைக்காரன் தினமும் நடந்து வரும் பாதை வழியே போட்டார்.

ஆனால், அந்தப் பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? அன்றைய தினம் பார்வையில்லாதவர்கள் எப்படி தெருவில் நடப்பார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக தனது இருகண்களையும் இறுக மூடியவாறு தட்டுத்தடுமாறி நடந்தான். இதிலே வழியிலே கிடந்த பண முடிச்சு அவனுக்குத் தெரியவில்லை. பண முடிச்சையும் தாண்டிப் போய்விட்டான்.

சற்று நேரம் கடந்த நிலையில் கண்களைத் திறந்தான். "ஆஹா! கண்ணில்லாதவன் மாதிரியே நடந்து விட்டோமே என்ற பெருமையில் அவன் அப்படியே சென்று விட்டான்.

இவன்போன பாதையால் ஒருவன் சாதாரணமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவ்வேளையில் அவனுக்கு கண்ணிலே அந்தப் பண முடிச்சு தென்பட்டது. அதை எடுத்துக் கொண்டு சந்தோஷமாக நடக்க ஆரம்பித்தான். தேவலோகத்தில் இருந்து நாராயணனும் லட்சுமிதேவியும் இதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

"இப்போது என்ன நடந்ததென்று பார்த்தாயா... அந்த பக்தனை பணக்காரனாக மாற்ற வேண்டுமென்று துடி துடித்தாயே... முடிந்ததா உன்னாலே?" என்று கேட்டார்.

லட்சுமிதேவி அதன்பின்னர் தான் ஒத்துக் கொண்டார். உண்மை தான் பிரபு; விதிப்படிதான் எதுவுமே நடக்கிறது என்பதை இப்போது நான் ஒத்துக் கொள்கிறேன்" என்றாள்.

இந்தக் கதையை அறிவு பூர்வமாக சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

"ஒரு பக்தனை பணக்காரனாக மாற்ற வேண்டுமென கடவுள் நினைத்தால்கூட அது முடியாது என்ற ஒரு உண்மை இக்கதையினுள் இருக்கிறது. அந்த விதி யார் கையிலே இருக்கிறது... மனிதன் கையிலேதான்.

மனிதன் சிறந்த விதமாக நடந்து கொண்டால், விதியும் அவனுக்கு சாதகமாக அமையும்.

விழித்துக் கொண்டிருக்க வேண்டிய நேரத்திலே கண் மூடியிருக்கிறது போல ஆகிவிடும். இந்தப் பிச்சைக்காரனுக்கு நடந்த மாதிரி...

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# போரை நிறுத்துவதாகக் கூறி தீவிரப்படுத்தியவரே கருணாநிதி

## அவரின் சாதனை என்கிறார் ஜெயா

இலங்கையில் போரை நிறுத்த ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி போரை தீவிரப்படுத்தியதுதான் கருணாநிதியின் சாதனை. இவ்வாறு முதல்வர் ஜெயலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் விவகாரம் தொடர்பாக தமிழகத்தில் மாணவ, மாணவியர் நடத்தி வரும் போராட்டம் குறித்து நேற்றைய தினம் சட்டமன்றத்தில் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இதன் மீது நடந்த விவாதத்தில் அனைத்துக் கட்சி எம். எல். ஏக்களும் உரையாற்றினர்.

இதற்கு பதில் அளித்த முதல்வர் ஜெயலலிதா உரையாற்றுகையில்,

இலங்கைத்தமிழர்கள்பிரச்சனை குறித்தும் இந்தப் பிரச்சனை தொடர்பாக மாணவ, மாணவியர் நடத்தி வரும் போராட்டம் குறித்தும் உறுப்பினர்கள் இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வந்து தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடி மக்களாக நடத்தப்படுவதை எதிர்த்தும் இலங்கை அரசின் இன வெறிக்கொள்கையை எதிர்த்தும் அங்குள்ள தமிழர்கள் 1980 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்தே குரல் எழுப்பி வருகிறார்கள்.

இந்த நீண்ட நெடிய உரிமைப் போராட்டத்தை நசுக்கும் வண்ணம் ஒட்டுமொத்த தமிழினத்தையே அழிக்க வேண்டும் என்ற நோக்கில் 2007 ஆம் ஆண்டிலிருந்து திட்டம் தீட்டி அதனை வெற்றிகரமாக 2009 ஆம் ஆண்டு நிறைவேற்றியது இலங்கை அரசு.

தமிழினத்தை அழித்த இலங்கை அரசுக்கு அனைத்து விதமான உதவிகளையும் செய்தது தி.மு.க அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்திய மண்ணில் இந்திய இராணுவம்இரகசியமான முறையில் போர் பயிற்சி அளித்து இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது. மிக நவீன இராணுவ ரேடார் கருவிகளை வழங்கியது.

இந்தியஇராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் இந்திய அரசின் உயர் அதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி சென்றது என பல செய்திகளை அப்போது ஊடகங்கள் படம் பிடித்துக் காண்பித்தன. நானும் இது குறித்து அறிக்கைகள் வெளியி ட்டு இந்திய அரசின் தமிழின விரோ செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருந்தேன்.

இந்தச் செய்திகளுக்கு எல்லாம் மத்திய அரசு எவ்வித மறுப்பையும் தெரி விக்கவில்லை. தமிழர் நலனை முன்னிட்டு மத்திய காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க வெளியேற வேண்டும் என்றும் அ போதே நான் தெரிவித்திருந்தேன்.

ஆனால் அப்போது மாநிலத்திலும் மத்தியிலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியோ அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இரண்டுவாரத்தில் போர்நிறுத்தத்துக்குமத்தியஅரசு முன்வராவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா கடிதங்கள் யாரிடம் கொடுக்கப்பட்டன என்பதை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

சில நாட்கள் கழித்து அப்போதைய மத்திய அமைச்சர் பிராணாப் முகர்ஜி கருணாநிதியை சந்தித்த பின் மத்திய அரசின் நடவடிக்கை திருப்தி அளிப்பதாக இருக்கிறது என்று தெரிவித்து இராஜினாமா நாடகத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார் கருணாநிதி. இவ்வாறு ஜெயலலிதா தெரிவித்தார்.(அ–2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 | 140 |
| தக்காளி | 100 | 70 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 40 |
| கோவா | 50 | 40 | 40 | 60 |
| கரட் | 100 | 100 | 140 | 120 |
| பூசணி | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 50 | 70 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 40-70 | 80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | 80 |
| பயற்றங்காய் | 70 | 70 | 70 | 80 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 600 | -- |
| போஞ்சி | 120 | 120 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 60 | 50 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40-50 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 90 | 120 | 90 |
| வெங்காயப்பூ | 160 | 180 | -- | 160 |

## இராசி பலன்

**28.03.2013**
(பங்குனி 15, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
பிரதமை பிற்பகல் 2.39 மணிவரை
அத்தம் முற்பகல் 10.16 மணிவரை
இராகுகாலம் 1.43-3.13 மணிவரை
சுபநேரம் 7.43-9.13 மணிவரை

**மேடம்** உறவினர் வருகையுண்டு, குடும்பத்தில் குதூகலம் ஏற்படும், தேகாராக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், செய்தொழில் விருத்தியுண்டு.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, சில சந்தர்ப்பங்களில் காரிய இடையூறுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** தொலைப் பேசித் தகவல் மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும், பெற்றோர்களின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** கனிவாக பேசி காரியங்களைச் சாத்தித்துக் கொள்வீர்கள், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

**சிங்கம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சான்றோர் சந்திப்புண்டு, பேச்சில் இனிமை ஏற்படும், தொழில் முன்னேற்றம் உண்டு, வழிபாட்டால் அமைதி கூடும்.

**கன்னி** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி வரலாம், சயன சுகக்குறைவான நாள்.

**விருச்சிகம்** சகோதர ஒற்றுமை பலப்படும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த கருமங்கள் கைகூடும்.

**தனுசு** தொழில் முன்னேற்றம் கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், தூரதேச செய்திகள் மகிழ்ச்சி தரும், உற்சாகமான நாள், நண்பர்கள் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், தொழில் நன்மையுண்டு, பயந்த சுபாவமுண்டு, கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** குடும்பத்தில் கோபத்தை குறைத்துக் கொள்வதன் மூலம் அமைதி ஏற்படும், விரயங்கள் கூடும், வேலைச் சுமை கூடும், காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**மீனம்** கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றகரமான நாள், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண மண்டபத்திற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

(சுரவெட்டி)

ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்திற்கு அச்சுவேலி பொலிஸாரால் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்தின் மீது நேற்று முன்தினம் இரவு ஒரு பகுதி தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து இப்பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, லண்டனில் இருந்து ஆவரங்கால் கிராமத்தை பற்றி புத்தகம் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டது.

அப்புத்தகத்தில் ஆவரங்கால் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பகுதியினரை தாழ்த்தும் வகையில் வெளியிடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு பகுதியினர் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஆர்ப்பாட்டமாக சென்று ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்திற்கு முன்பாக மேற்குறித்த புத்தகமொன்றை தீயிட்டு கொளுத்தியும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.





பின் திடீரென திருமண மண்டபத்திற்குள் புகுந்து அங்கிருந்த கதிரைகள், அலங்கார மின்குமிழ்கள், இரு மோட்டார் சைக்கிள்கள், திருமண மண்டப கண்ணாடிகள், திருமணத்திற்காக கட்டப்பட்ட வாழைக்குலைகள் ஆகியவற்றை அடித்து நொறுக்கி அட்டகாசம் புரிந்தனர்.

பின் அங்கிருந்து பணியாளர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு அவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் ஆவரங்கால் திருமண மண்டபம் போர்க்களமாக மாறியது.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த அச்சுவேலி பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைத்து அமைதி நிலைமையை ஏற்படுத்தினர். பின் நேற்று நடைபெற்ற திருமண நிகழ்விற்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர். (அ-3-24)




நன்றி: அததெரண

# விநாயகர் சனசமூக நிலையத்தின் தாச்சி சுற்று போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி விநாயகர் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் தென்மராட்சி பகுதியினருக்கான அரை இறுதி தாச்சிச்சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெற்றது.

இப்போட்டியில் கைதடி சரஸ்வதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து களமிறங்கிய கைதடி துர்க்கா விளையாட்டு கழகம் 16:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டு கழகத்துடன் மோதவுள்ளது.

அதேதினம் நடைபெற்ற வலிகாம பகுதியினருக்கான கால் இறுதி தாச்சி சுற்றுப் போட்டியில் சுழிபுரம் பயஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டு களமிறங்கிய புதுமடம் வைகரை விளையாட்டு கழகம் 15:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள அரையிறுதி தாச்சி சுற்றுப் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டு கழகத்துடன் மோதவுள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள அரை இறுதி தாச்சி சுற்றுப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டு கழகத்தை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டு கழக ஏ அணியினர் மோதவுள்ளனர். (அ-3)

# தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அதிக ஆசிரிய பயிலுநர்கள் உள்வாங்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் ஒவ்வொரு மாகாணத்தினதும் பாடத்துறை சார்ந்த ஆசிரியர் தேவைப்பட்டியல் மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து பெறப்பட்டு அதற்கு பொருத்தமான வகையில் ஆட்சேர்ப்பு இடம்பெறுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளதாக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான ஆட்சேர்ப்பு முறைமை நாட்டின் தேசிய கொள்கைகளுக்கு அமைவாக காலத்திற்கு காலம் மறு சீரமைக்கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே.

இதனடிப்படையில் வடமாகாணக் கல்வி அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 315 அழகியல் துறை சார் ஆசிரியர்கள் மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர் எனக்கல்வி அமைச்சிற்கு அறியத் தரப்பட்டுள்ளது.

அதேவேளை வடமாகாணத்தில் ஆசிரிய வெற்றிடங்களாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானம் ஆகிய பாடத் துறைகள் காணப்படுகின்றன. இவ் வெற்றிடங்கள் வடமாகாணத்தில் உள்ள கல்வியியற் கல்லூரிகளின் மூலமே பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

எனவே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் வழங்கப்படக்கூடிய தங்குமிட வசதிகள் வளங்களுக்கு அமைவாக கணிதம் ஆங்கில, தமிழ் மொழி மூலங்களில் 60 பேர், விஞ்ஞானம் ஆங்கில, தமிழ் மொழி மூலங்களில் 60 பேர், ஆரம்பக் கல்வித் துறையில் 30 பேர், நூலக விஞ்ஞானத் துறையில் 30 பேர், ஆங்கிலம் 60 பேர், விசேட கல்வி 20 பேருமாக மொத்தம் 260 ஆசிரியப் பயிலுநர்கள் இவ்வருடம் உள்வாங்கப்படவுள்ளனர்.

நூலக விஞ்ஞானத்துறை பாடநெறி 2008 ஆம் ஆண்டு வரை எமது கல்லூரியில் இருந்து வந்தது. பின்பு இப்பாடநெறி இடைநிறுத்தப்பட்டு இவ்வருடம் முதல் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல மாகாணத்தின் ஆசிரியத் தேவைப்பாட்டில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் அழகியல் பாடங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்வாங்கப்படுமெனவும் அழகியல் பாடத்துறை சார் வளங்கள் தொடர்ந்தும் பேணப்படும் எனவும் கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# பொலிஸ் நிலையத்திற்கு சிறுவர்களை அழைத்து வராதீர்

(சுரவெட்டி)

வடமராட்சி பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகளுக்கும் மற்றும் தேவை நிமிர்த்தம் செல்லும் மக்கள் தமது பிள்ளைகள் மற்றும் சிறுவர்களை அழைத்து வரக் கூடாதென பொலிஸார் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

வடமராட்சியில் உள்ள மூன்று பொலிஸ் பிரிவுகளான பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு மக்கள் சிலர் பாரிய குற்றச் செயல்கள் மற்றும் தேவை நிமிர்த்தம் பொலிஸ் நிலையங்களுக்கு வரும்போது தமது சிறு பிள்ளைகளையும் மாணவர்களையும் அழைத்து வருவதனால் அவர்களுடைய மனதில் துணிவும் குற்றச் செயல் உணர்வும் ஏற்படுவதற்கு வழி வகுக்கின்றது.

எனவே, சிறு வயது முதல் பொலிஸ் நிலையங்களை அறியாத சிறுவர்களாக நாம் அவர்களை வளர்க்கும்போது எதிர்காலத்தில் குற்றச் செயல்கள் குறைவடைய வாய்ப்புள்ளது.

எனவே, பொலிஸ் நிலையங்களுக்கு தேவையற்ற விடயங்களுக்கு சிறுவர்களை அழைத்து வருவதை தவிர்க்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (அ-3-24)


# சமுர்த்தி உத்தியோகத்தர் சங்க மாநாடு ஏப்ரலில்

அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத்தின் மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டிற்கு அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்க பிரதிநிதிகள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், சமுர்த்தி அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம், யாழ்.மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்க செயலாளர் எஸ்.பாஸ்கரன் தெரிவித்துள்ளார். (அ-3-19)







சீன அரசாங்கத்தின் புகையிரத சேவை பிரிவினரின் நிதியுதவியுடன் யாழ்.நூலகத்தின் உசாத்துணை பகுதியானது மீள் புனரமைக்கப்பட்டு நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

இப்பகுதியினை சீன பிரதம செயலாளர் சூபில், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ்.மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் சீன பிரதம செயலாளருக்கு ஆளுநரால் நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# கலந்துரையாடல்

(இருபாலை)

யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலய பழைய மாணவர்களுக்கான பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து பழைய மாணவர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி நேரடியாகவோ அல்லது 0212226997 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ பாடசாலை அதிபரிடமோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2-136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிரதேச சபையைக் கூட சுதந்திரமாக நடத்த முடியவில்லை

## ஜனநாயகம் செத்து விட்டது- சிறிதரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்ட இயக்கங்கள் என்ற வரையறைக்கப்பால் மக்களுடன் நல்லுறவினை பேணியதால் மக்கள் அவர்களுக்கு ஆதரவு வழங்கினர். ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது வன்முறையினை கட்டவிழ்த்து அடக்கியாள முயல்கின்றனர். இவ்வாறுதான் இலங்கை ஆட்சியாளர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆட்சி நிலை வேறுபடுகின்றது. இதனால்தான் தமிழ் மக்கள் மனங்களில் இருந்து தமிழக் கோரிக்கையினை இலங்கை அரசினால் களைய முடியாதுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

போரினால் இடம்பெயர்ந்த மக்களிடம் தற்போது அரசு கூறிக் கொண்டிருப்பது கடந்த 30 வருடமாக நீங்கள் எதனைக் கண்டீர்கள். ஒன்றுமே உங்களுக்கு தெரியாது என்பதே. ஆனால் கடந்த 30 வருட காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களின் அபிவிருத்தி என்பது வியப்பிற்குரிய விடயமாகும்.

கட்டடங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் அபிவிருத்திகளினையும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 3 ஆயிரம் கொடுப்பனவு, வறிய மக்களுக்கு, நோயாளிகளுக்கு பண உதவி என எத்தனையோ உதவிகளினை செய்துள்ளனர்.

ஆனால் தமிழ் மக்களுக்கு கடந்த 4 வருடங்களுக்குள் இந்த அரசு எதனை பெரிதாக செய்து கிழித்துள்ளது. ஒரு பிரதேச சபையினை கூட சுதந்திரமாக நடத்த முடியவில்லை. ஜனநாயகம் செத்துப்போய் இராணுவத்திற்கு மறு வடிவம் கொடுக்கப்பட்டு சிவில் சமூகம் என்ற வடிவில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

ஒரு பிரதேச சபையினை கூட சுதந்திரமாக செயற்பட அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு இனத்தினை தனித்துவப்படுகின்ற கட்சியினால் மக்களுக்கு உதவிகள் போய் சேரக் கூடாது என்ற கபட நோக்குடன் இருக்கும் இவ் அரசு எமக்கான அரசியல் தீர்வினை எவ்வாறு வழங்கும்?

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலமென்பதற்கு அப்பால் அக்காலப் பகுதியில் மக்கள் உரிய வசதிகளுடன் வாழ்ந்தே வந்தனர். ஆனால் இன்று நிலையே வேறு. தனியொருவர் தனித்து நின்று உழைத்து தனது குடும்பத்தினை பார்க்க முடியாத நிலை, ஆசிரியர் இடமாற்றத்தில் அதீத தலையீடு காரணமாக கல்வி கற்றவன் வீதியில் நிற்க வேண்டிய நிலைமை. இவ்வாறு தமிழனின் அவலம் தொடர் கதையாகிக் கொண்டேயுள்ளது.

பிரபாகரனோ, இளைஞர்களோ தனித் தமிழீழம் கோரவில்லை. 1976 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிதான் தனித் தமிழீழம் கோரி தேர்தலில் அமோக வெற்றியும் பெற்றது.

அவர்கள் கோரியதைத்தான் பிரபாகரனும் இளைஞர்களும் வழிநடத்தி சென்றார்கள். எமக்கான தீர்வு வழங்கப்படும் வரையில் தமிழ் மக்கள் தனி நாடு என்றுதான் கோருவர். இயற்கை எப்போதும் எம்மை கைவிடாது. காலம் எமது துன்பங்களுக்கு பதில் சொல்லித் தான் ஆக வேண்டும்!

ஆயுதம் மேல் நாம் காதல் கொண்டவர்கள் அல்ல ஆனால் ஆயுதம் தூக்க இந்த அரசு வழி வகுத்து விடக் கூடாது என்றார் அவர். (அ-4)

## ஒய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ். பிரதேச செயலக சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யா/ புனித அடைக்கலமாதா ஆலய ஜெரோ மண்டபத்தில் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும்.

இப்பொதுக் கூட்டத்தில் புதிய உறுப்பினர் சேர்வும் அங்கத்துவ அட்டை பெறாதவர்களுக்கு அட்டை வழங்கலும் இடம்பெறும்.

எனவே புதிய அங்கத்தவர்களாக இணைய விரும்புபவர்கள் தமது ஓய்வூதிய அடையாள அட்டையுடன் வரவேண்டும். இச்சங்கத்தில் இணைவதால் பெறக் கூடிய நன்மைகள் வருமாறு,

இரண்டு பிள்ளைகளுக்கு பல்கலைக் கழக கல்வியின் போது முதலாம் ஆண்டிற்கு மட் டும் புலமைப்பரிசில் 3 ஆயிரம் ரூபாவாகும். வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றால் முதல் பத்து நாட்களுக்கு மட்டும் ஒரு நாளுக்கு மட்டும் 200 ரூபா வீதம் மொத்தம் 2 ஆயிரம் ரூபா ஆகும். கண் சத்திர சிகிச்சை விழி வெண்படலம் நீக்கி வில்லை பொருத்துவதற்கு ஒரு கண்ணுக்கு 2 ஆயிரத்து 500 வீதம் 5 ஆயிரம் ரூபாவாகும். 10 ஆயிரம் ரூபா மற்றும் 15 ஆயிரம் ரூபா கடன் திட்டங்கள்; பிள்ளைகளின் தொழில் வங்கி செயற் பாடு, சேமிப்புத் திட்டம், இறப்பு மானிய கொடுப்பனவு செலுத்திய தொகையின் பத்து மடங்கு , விசேட மரணக்கொடை திட்டம் ரூபா 19 ஆயி ரத்து 500 ரூபா விற்கு மேல் பெறமுடியும் என இச்சங்கச் செயலாளர் க. கணேச[illegible] ளார். (அ-2)


**"சமகால அரசியலில் தமிழ் -சிங்கள - முஸ்லிம் சிவில் சமூகத்தினரின் பங்கு"**

**கருத்துப் பகிர்வு**

**இடம் : மூர்த்தி கெஸ்ட் கவுஸ்**

*2ஆம் மாடி, 62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

**காலம்: 30.03.2013 சனிக்கிழமை**

**நேரம்: காலை 10.00-2.00 மணி**

இக்கருத்துப் பகிர்வு மதிய உணவுடன் நிறைவுபெறும் .
ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**"விழுது" ஆற்றல் மேம்பாட்டு மையம்.**

*23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி .*

*தொலைபேசி : 0212229866*

(2258)

ST JOHN'S COLLEGE · JAFFNA · CEYLON

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

**VACANCIES**

Applications are hereby invited from the qualified persons for the following vacancies.

1.To teach English Medium Biology for A/L Classes
2.To teach English Medium Economics for A/L Classes

Please send your complete CV including the contact details of two non -related referees by post or via e-mail on or before 03rd April 2013 to the following address. Only shortlisted candidated will be called for the interview.

*The Principal*
*St. John's College*
*Jaffna*
*stjohns@sltnet.lk*

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேடடை 1<br>உயரம்: 5'10"<br>உயரம்: 44, 7 இல் செவ்<br>தகைமை/தொழில்: B.Sc, அபிவிருத்தி உதவியாளர்<br>தொ.இ: B -1487 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி, 8 இல் செவ்<br>உயரம்: 4'6"<br>தகைமை/ தொழில்: HNDA, சட்டம் (வக்கீல்)<br>தொ.இ: G -1501 |
| பிறப்பு: 1958 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L<br>ஓய்வூதியம் (அரச), மனைவியை இழந்தவர்<br>தொ.இ: B -1490 | பிறப்பு: 1976 இந்து செட்டியார்<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 21.5<br>தகைமை/ தொழில்: CIMA Information Technology உதவிக்கணக்காளர்<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G-1505 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:ஆயிலியம் 3, 7இல் செவ்<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: B -1493 | பிறப்பு: 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்:Trained English Teacher<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G -1506 |
| பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 3<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில்: UK (Not-PR) வர்த்தக முகாமைத்துவம்<br>தொ.இ: B -1494 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>தகைமை/ தொழில்: B.A<br>தொ.இ: G -1507 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்


தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது...

# பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கக் கோரிக்கை

### மன்மோகனுக்கு கடிதம்

### எழுதுகிறார் புதுச்சேரி முதலமைச்சர்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டை புறக்கணிக்குமாறு மத்திய அரசிடம் கடிதம் மூலம் வலியுறுத்தப்படும் என புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டசபை வரவு- செலவுக் கூட்டத் தொடர் தற்போது நடந்து வருகிறது.

இன்றைய கூட்டத்தின் போது அ.தி.மு.க. எம். எல். ஏ. அன்பழகன் எழுந்து பொது நலவாய மாநாட்டை புறக்கணிக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதேபோல் புதுச்சேரி முதல்வரும் கடிதம் எழுத வேண்டும் என கூறினார். இதற்கு பதிலளித்த புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி பொது நலவாய மாநாட்டை புறக்கணிக்க பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதுவோம் என கூறினார். புதுச்சேரியில் காங்கிரஸ் ஆட்சி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சில வெளிநாட்டு இராஜதந்திர அலுவலகங்கள் இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சில வெளிநாட்டு இராஜதந்திர அலுவலகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

பங்களாதேஷ், கொரியா, ஈராக் ஆகிய நாடுகளின் அலுவலகங்களே தற்காலிக மற்றும் நிரந்த அடிப்படையில் இடமாற்றப்பட்டுள்ளன.

இதனால் கொழும்பு -07, வோட் பிளேஸில் கடந்த பல வருடங்களாக இயங்கி வந்த பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம் கடந்த வாரம் முதல் இடமாற்றப்பட்டுள்ளது. தற்போது இல. 03, கிரகரிஸ் வீதி, கொழும்பு-07 என்ற முகவரிலேயே பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம் செயற்படுகின்றது.

இதேவேளை ஈராக் தூதுவராலயமும் இடமாற்றப்பட்டுள்ளது.

புனரமைப்பு வேலைகள் காரணமாக கொழும்பு-07 ,பான்ஸ் பிளேஜில் இயங்கிய ஈராக் தூதுவராலயம் 32 ஆம் மாடி ஜெய்க் ஹில்டன் என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு -07, தர்மபால மாவத்தையில் செயற்பட்டு வந்த கொரிய தூதுவராலயம் புனரமைப்பு வேலைகள் காரணமாக இல 41, ஹில்பர் கிரஸன்ட், கொழும்பு-07 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஒன்பது குற்றச்சாட்டுக்களை சுமத்தி கைது செய்ய முயற்சி

### இன்று ஆஜராகிறார் அசாத் சாலி

நேர்மையாகவும் உண்மையாகவும் செயற்படுவதனாலேயே மற்றையவர்களின் இழிவான செயற்பாடுகளை என்னால் வெளிப்படையாக விமர்சிக்க முடிகின்றதென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பான்ஸ் பிளேஸில் அமை ந்துள்ள அசாத் சாலி மன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெ விக் கையில், இந்த நாட்டில் பொதுபலசேனா என்ற அமைப்பு எவ்வளவோ சகிக்க முடியாத குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றது. அதற்கு தகுந்த் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத பொலிஸாரும் குற்றத் தடுப்புப் பிரிவினரும் நான் அனுப்பிய ஒரு குறுந்தகவலுக்காக என்னை கைது செய்ய முயற்சிக்கின்றமை வேடிக்கையாக உள்ளது.

நான் ஒரு நேர்மையானவன் என்ப தனாலேயே மற்றவர்களைப் பற்றி என்னால் வெளிப்படையாக விமர்சிக்க முடிகின்றது.

இதேவேளை எமது சமூகத்தில் உள்ளவர்களே காட்டிக்கொடுக்க முற்படுகின்றனர். என்மீது 9 குற்றச்சாட்டுக்களை சுமத்தி என்னை கைது செய்ய முயற்சிக்கின்றனர்.

எனவே நான் இன்று வியாழக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் ஆஜராகவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இனவாதிகளின் செயற்பாடுகளே புலிகள் உருவாகுவதற்கு காரணம்

(கொழும்பு)

தற்போது அரசில் அங்கம் வகிக்கும் கடும்போக்குடைய இனவாதிகளின் செயற்பாடுகளை ஒத்த செயற்பாடு உடையவர்களாலேயே ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு உருவெடுத்தது என இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பு பான்ஸ் பிளேசில் அமைந்துள்ள அசாத் சாலி மன்றத்தின் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடும்போக்குடைய இனவாதிகளின் செயற்பாடுகளை ஒத்த செயற்பாடுடையவர்களாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு அன்று உருவெடுத்தது.

இந்நிலையில் அவ்வாறான ஒரு அமைப்பு இனிமேல் உருவெடுக்காதிருக்க நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் அடங்கியுள்ள 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண சபை தேர்தல்களை நடத்துதல் போன்ற பரிந்துரைகளையாவது நிறைவேற்றி சிறுபான்மை மக்களின் நிலையை உறுதிப்படுத்த வேண்டும்.

இதேவேளை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றத் தவறினால் சர்வதேச நாடுகள் பலவற்றின் அழுத்தங்களுக்கு எமது நாடு தள்ளப்படும் நிலை உருவாகும். இருப்பினும் அரசாங்கத்திற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் சிறிதளவேனும் நோக்கமில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தேர்தலில் வாக்களிக்க தேசிய அ. அட்டை அவசியம்

(கொழும்பு)

வட மாகாணத் தேர்தல் நடைபெறவிருப்பதால் அடையாள அட்டை பெறுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கடைசியாக 1988 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. விடுதலை புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே தொடர் சண்டை மூண்டதால் தேர்தலுக்குரிய சாதகமான சூழல் தோன்றவில்லை. கடந்த 2009 இல் விடுதலை புலிகளுடனான சண்டை ஓய்ந்த பின் போரின் காரணமாக பலர் இடம்பெயர்ந்து சென்று விட்டனர். தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களில் மக்கள் குடியேறி வருகின்றனர்.

சர்வதேச நாடுகளின் வற்புறுத்தலுக்கு இணங்க எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மக்கள் குறித்த தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக அடையாள அட்டை பெறுவது உள்ளிட்ட விடயங்களை தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அறிவுறுத்தி வருகிறது. (அ-2)

# வாழ்வாதார கொடுப்பனவு

பெண்களைத்தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மன்னார் சர்வோதயத்தி னால் கடந்த திங்கட்கிழமை வாழ்வாதார கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இதன்கீழ் சுமார் 20 குடும்ப பெண்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் காசோலைகள் வாழ்வாதார கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்டன.

இதன்போது மன்னார் சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் சிறினிவாசன் யுகேந்திரன், சர்வோதய அமைப்பின் சமூக வேலைத் திட்ட இணைப்பாளர் வேலு கணேஸ், கணக்காளர் மகேந்திரன் கௌதமி ஆகியோர் இணைந்து காசோலைகளை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர். (அ-2)

# வாகனங்களை பெற்றுக்கொள்ளலாம்

(முல்லைத்தீவு)

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது மக்களால் கைவிடப்பட்ட வாகனங்களை கையளிக்கும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் முல்லை மாவட்ட செயலகத்தால் நடைபெற்றுவருகின்றது என முல்லை மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகம் அறிவித்துள்ளார். இவ்வாகனங்கள் கையளிக்கும் நிகழ்வு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. எனவே வாகனங்களை தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களை காட்டி பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களை 02432 414 51 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-3-267)

# சமய விவகார அமைச்சினால் புதிய சட்டம் உருவாக்கப்படும்

(கொழும்பு)

மதங்களை இழிவுபடுத்துவோருக்கு எதிராக புதிய சட்டங்கள் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமய வீவகார அமைச்சினால் இந்த சட்டம் உருவாக்கப்படவுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய மதங்களுக்கு இழிவு ஏற்படும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் சட்டம் உருவாக்கப்படவுள்ளது.

குறிப்பாக குறித்த மதங்களின் ஆரம்பக் கற்பிதங்களை திரிபுபடுத்தி போலியான பிரசாரங்களை மேற்கொள்வோருக்கு தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமய விவகார அமைச்சின் செயலாளர் எம்.கே. பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மதங்களின் மூலக் கொள்கைகளுக்கு எதிராக பிரசாரம் செய்வோரை எவ்வாறு தண்டிப்பது என்ற பொறிமுறைமை இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதங்கள் இழிவுபடுத்தப்படுவதனை தடுப்பதற்கு தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லை எனத் தெரிவித்துள்ளார். (அ-2)

# தங்கம் கடத்திய நபர் கைது

(கொழும்பு)


இலங்கையில் இருந்து திருச்சிக்கு தங்கம் கடத்திச் சென்ற இலங்கை பிரஜை ஒருவர் திருச்சி விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து இந்திய ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில்,

கடந்தாண்டு இலங்கையில் இருந்து பெங்களூக்கு தங்கம் கொண்டு செல்லும் போது விமான நிலைய சுங்க அதிகாரிகள் குறித்த நபரை கைது செய்தனர். அவரின் கடவுச் சீட்டில் தடை முத்திரையிடப்பட்டது.

இந்நிலையில் சென்னை வந்த அந்நபர் கடவுச்சீட்டில் போலி முத்திரையிட்டு இலங்கை சென்றார். 25 பவுண் தங்கத்துடன் நேற்று முன் தினம் திருச்சி வந்தபோது சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட கழகங்களுக்கு யு.எஸ்.எயிட் நிறுவனத்தினரால் அண்மையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கான விளையாட்டு உபகரணங்களை சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவரும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான சுபாகர், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உபதலைவருமான உஷாந்தன் ஆகியோர் இணைந்து ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழகத் தலைவரிடம் வழங்கி வைப்பதையும் அருகில் குறித்த கல்லூரி அதிபர் வணபிதா. ஜேசுதாசன் அடிகளார் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படங்கள் :-மானிப்பாய் செய்தியாளர்)

# வவு. வடக்கு கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(வவுனியா)

வவுனியா வடக்கு வலயத்திற்குட்பட்ட வ/ ஓமந்தை மத்திய கல்லூரி தரம் 1ஏபி பாடசாலையினது அதி பர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1,2-I ஐச் சேர்ந்த மற் றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, ஐச் சேர்ந்தவர்களிடம் இரு ந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

அதிபர் சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையினைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாணக்கல்வித் திணைக்களத்திலும் வவுனியா வடக்கு, தெற்கு வலயங்களிலும் பார்வையிட்டு அதற்கமைய தங்கள் விண்ணப்பத் தினை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக்கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அதிபர் சேவை தரம் 1,2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் வவுனியா வடக்கு வலயத்தினைச் சேர்ந்த அதிபர் சேவை தரம் 2-II ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும். (அ)

# அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப காலம் கனிந்துள்ளது

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலை 2014 ஆம் ஆண்டில் நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்த திட்டமிட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தை தோற்கடிக்கும் நோக்கில் இவ்வாறு தேர்தலை நடத்த வலியுறுத்தப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் மக்களை பாதுகாக்கத் தவறியுள்ளதாகவும் இத னால் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டியகாலம் மலர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டிற்கான தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகிறது. நாட்டின் நன்மதிப்பை இந்த அரசாங்கம் களங்கப்படுத்தியுள்ளதுடன் மறுபுறத்தில் மக்களின் வயிற்றில் அடித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாகவே தேசிய பிரச்சினைகளின் போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருந்தது. எனினும் இந்த அழைப்பை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை கடுமையாக விமர்சனம் செய்யும் அரசாங்கம் மறுபுறத்தில் நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கிறது.

அரசாங்கம் தனது பணிகளை உரிய முறையில் ஆற்றாது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையை குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை என்றார். (அ-2)

# கொழும்பு தமிழ் சங்கத்தில் நூற்கண்காட்சியும் விற்பனையும்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்துள்ள நூற்கண்காட்சி, நூல் விற்பனை, ஓவியக்கண்காட்சி ஆகியன நாளையும் நாளை மறுதினமும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா, தமிழ்ச்சங்க இலக்கியக் குழுச் செயலாளர் மு.தயாபரன், சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற் போதைய துணைத்தலைவருமான மு. கதிர்காமநாதன், சங்கத்தின் துணைத்தலைவர் கி.இராஜகுலேந்திரா, சங்கத்தின் நூலகக் குழுச் செயலாளர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் அந்த மூன்று தினங்களிலும் காலையிலும் மாலையி லும் நடைபெறும் நிகழ்வுக்குத் தலைமை தாங்கவுள்ளனர்.

கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகளின் மூத்த ஊடகவியலாளர்கள் இந்த நிகழ்வுகளில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கண்காட்சியின் போது நூல்களை விசேட கழிவு விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, இணைப்பாளர் அ.எதிர்வீரசிங்கம் கந்தசாமி ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு தோல்வி

## த பெஸ்ட் போஸ்ட் இணையம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் கட்டுப் பாடுகளை இந்தியா சீனாவிடம் தாரை வார்த்துக் கொடுத்துள்ளதாக த பெஸ்ட் போஸ்ட் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா இலங்கை விடயத்தில் இராஜதந்திர ரீதியாக தோல்வியையே எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையின் காணி, வான் மற்றும் கடல் ஆகிய மூன்றிலும் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

இந்தியா ஏற்படுத்திக் கொடுத்த இடைவெளிகளில் சீனாவின் காற்று புகுந்து கொண்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கை மீது இந்தியா கொண்டிருந்த அதிகாரங்களை சிறிது சிறிதாக இழந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராஜதந்திர நடவடிக்கைகள் இந்தியா சரியான முறையில் கையாளாமையே இதற்கான காரணம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மத்தியஸ்தர் சபை

# உறுப்பினர்களுக்கான 5 நாட்கள் செயலமர்வு

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் மத்தியஸ்தர் சபையை தெரிவு செய்வதற்கு நீதி அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்தர்சபை உறுப்பினர்களுக்கான 5 நாட்கள் பயிற்சி கடந்த 25 ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது. இப்பயிற்சி பூநகரி மட்டுவில் நாட்டில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நீதி அமைச்சின் பயிற்சி இணைப்பாளர் பி.தெமட்டகொட தலைமையில் நடைபெற்றுவருகிறது.

22 இற்கும் மேற்பட்ட மத்தியஸ்தர்சபை உறுப்பினர்கள் இப்பயிற்சியில் பங்குபற்றி வருகிறார்கள். நீதி அமைச்சை சேர்ந்த பயிற்சி வளவாளர்களாக ஆர். ஜோன் பீரிஸ், எம்.ஏ.ஏ. ஹப்பர் கலந்து கொள்கின்றனர். (அ-3-84)


# கண்ணகை அம்பாள் பொங்கல்விழா

கிளிநொச்சி மாவட்ட பொறிகடவை அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் வேள்வி விழா எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அடியார்கள் பாற்செம்பு எடுத்தல், காவடிகள், தூக்குகாவடிகள் ஆகிய நேர்த்தி கடன் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதுடன் அன்றைய தினம் இரவு முழுவதும் விசேட பூஜைகள் நடைபெற்று மறுநாள் அதிகாலை தீ மிதிப்பு வைபவமும் வேள்வியும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-3-254)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# மனிதம் மலர முன்மாதிரி காட்டுவோம்



இயேசு சீடர்களுடைய காலடிகளைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துணியால் துடைத்து ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளை கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவர்களுடைய காலடிகளை கழுவ கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன் எனும் வேதாகமப் பகுதி இன்று எமக்கு தரப்படுகின்றது.

மனிதம் மலர வேண்டும். மானுடம் வாழ வேண்டும் என்பதற்காக இந்நிகழ்ச்சி மூலம் இயேசு முன் வைக்கும் கருத்து இது. அந்த முன்மாதிரி அன்பின் முதிர்ச்சி. அந்த அன்பின் முதிர்ச்சி நமது வாழ்விலும் மிளிர வேண்டும். கூடி வாழவும் பகிர்ந்து கொள்ளவும் பணித்த இயேசு அதற்குத் தாழ்ச்சி வேண்டும். பணிவு வேண்டும் என்பதைச் செயற்படுத்திக் காட்ட அன்று சீடர்களின் பாதங்களைக் கழுவி பாடம் கற்பித்தார்.

இந்நிகழ்வில் இயேசுவின் பகிர்தலையும், பணிவையும், தாழ்ச்சியையும், பாசத்தையும் பார்க்கின்றோம். எம்மில் எத்தனை பேர் இந்தத் தாழ்ச்சியை ஏற்றுக் கொள்ளக்கூடிய மன நிலையில் வாழ்கின்றோம். நவநாகரிகமான உலகிலே நம்மை நமது ஆளுமையை பணத்தை, செல்வாக்கை நன்மதிப்பைக் காட்டி உலகில் பகட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இயேசு தன்னுடைய மூன்றாண்டு காலப்பகுதியில் தன்னோடு இணைத்துக் கொண்ட பன்னிரு சீடர்களோடு இறுதி இராவுணவு வேளையில் தந்தை அனைத்தையும் தம் கையில் ஒப்படைத்துள்ளார் என்பதையும் தாம் கடவுளிடம் திரும்பச் செல்ல வேண்டும் என்பதனையும் அறிந்திருந்தார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

இன்று நமது குடும்ப வாழ்விலே, குருத்துவ வாழ்விலே ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க , உயிரோட்டம் கொடுக்க நாம் எடுக்கும் முயற்சி என்ன? காய்க்கும் மரம் தன் கனிகளைத் தானே உண்பதில்லை. ஓடும் ஆறு தன் தண்ணீரைத் தானே பருகுவதில்லை. பூக்கும் செடி தானே தன் மலர்களை அணிவதில்லை. இவையெல்லாம் இருப்பது பிறர்க்காகவே. ஆம் இயேசு பிறந்ததும், வாழ்ந்ததும், போதித்ததும், இறந்ததும் தனக்காக அல்ல, மாறாக மனிதன் வாழ்வு பெறவே. இந்த [illegible] இன்றைய இராவுணவுக் கொண்டாட்டம். நாமும் இந்த இராவுணவின் பாடங்களை வாழ்வாக்குவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

411

## சூர்யவர்மனின் யுக்தி



முன்பு காஷ்மீர் தேசத்தை அவந்திவர்மன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். ஒரு தடவை அவன் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது.மக்கள் புசிக்க உணவின்றி தவிக்கலாயினர்.

காஷ்மீரம் மலைப் பாங்கான நாடு. அங்குள்ள நதிகள் செங்குத்தான பாறைகளின் வழியே ஓடிவரும். எனவே வெள்ளம் வந்தால் நாட்டில் நிறைய சேதம் ஏற்படும். அந்நாடு மிகவும் செழிப்பானது. மகாபத்மம் என்ற ஏரியினால் அநேக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நன்றாக விளைச்சலை அளிக்கும். ஆனால் பக்கத்து நிலங்கள் நன்றாக விளைவதற்குள் விதஸ்தா என்னும் நதியில் நிறைய வெள்ளம் வந்து ஏரியை நிரப்பி பயிரைப் பாழாக்கிவிடும்.

### அம்புலிமாமா கதைகள்

அந்த விதஸ்தா நதியின் வெள்ளத்தை கட்டுப்படுத்த அவந்திவர்மன் யோசித்துக் கொண்டிருக்கையில் சூரியவர்மன் என்பவன் தன்னால் ஆற்றின் வெள்ளத்தை அடக்க முடியுமென்று பலரிடம் சொல்லிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டான். ஆனால் ஜனங்களோ அவனைப் பைத்தியமென்று கூறி பரிகசித்து வந்தனர்.

ஆனால் ஆற்று வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தை தடுக்க ஏதாவது வழி செய்ய வேண்டுமென நினைத்த அவந்திவர்மன் சூரியவர்மனை அழைத்து வரச் சொன்னான்.

நீ வெள்ளத்தைப் போக்க முடியுமென்று சொல்கிறாயாமே. அது எப்படி உன் ஒருவனால் முடியும் என்று கேட்டான் அரசன்.

அதற்கு சூரியவர்மன் உலகத்தில் பணத்தால் நடக்காதது



எதுதான் இருக்கிறது. எனக்குப் போதிய பணம் கொடுத்தால் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துகிறேன் எனக்கூறினான். அரசனும் அவன் கேட்ட பணத்தைக் கொடுத்து அடுத்த வருடமே இந்த வெள்ள உபத்திரவம் நின்றாக வேண்டும் எனக்கூறினான்.

இதைக்கண்டு மந்திரி அரசனை எச்சரிக்க விரும்பினான். ஆனால் அரசன் அவனது எச்சரிக்கையைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. சூரியவர்மன் தனக்கு வேண்டிய பணத்தை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான்.

மக்கள் எப்போதும்போல அவனைச் சுற்றி நின்று கேலி செய்து நகைக்கலாயினர். ஒரு சிலர் அரசனை ஏமாற்றிப் பணத்தைப் பறித்துக் கொண்டானென்று கூறினர். அரசன் கூட இந்த பைத்தியக்காரனை நம்பிவிட்டானே என்று மனம் நொந்து கொள்ளலாயினர். சூரியவர்மன் அந்தப் பணத்தை எப்படி செலவு செய்வானென்பதை பார்க்கலாயினர்.

வெள்ளம் புரண்டு வரும் விதஸ்தாநதி மலையில் ஓரிடத்தில் குறுகிய கணவாய் வழியாக ஓடிச் செல்வதை சூரியவர்மன் கண்டான். பல வருடங்களாகப் பெரியபெரிய கற்கள் புரண்டு வந்து நதியின் மத்தியில் விழுந்து கிடப்பதையும் அவன் கண்டான். வெள்ளம் வருகையில் ஜனங்கள் அந்தக் குறுகிய வழியில் போய்ச்சீக்கிரமாக தப்புவார்களென்பதும் அவனுக்குத் தெரியும். இதே கற்களின் இடையில் பெருகும் தண்ணீர் தேங்கி பக்கத்து நிலங்களில் வழிந்து பயிர்களை நாசம் செய்கிறது என்பதை உணர்ந்தான். அந்தக் கற்களை அப்புறப்படுத்தினால் நீரோட்டம் சரியாகிவிடு மென்பது அவனுக்குப்பட்டது.

சூரியவர்மன் இந்தக்குறுகிய கணவாயருகே வரும்போது அவன் பின்னாலேயே ஊர் ஜனங்களும் வேடிக்கை பார்க்க வந்து நின்றனர். சூர்யவர்மன் அந்த நதியின் மத்தியில் ஒரு பாறையின் மீது நின்று தன் பணப்பையை அவிழ்த்து தங்க நாணயங்களை எல்லாம் பாறைகளின் பக்கமாக விட்டெறிந்தான்.

கூட்டம் இதைக்கண்டு கத்தியது. பைத்தியக்காரன் தங்க நாணயங்களை நதியில் எறிகிறானே என்று ஆத்திரமடைந்தது. சூர்யவர்மன் எல்லா நாணயங்களை விட்டெறிந்து அக்கரைக்குச் சென்றதும் கூட்டத்தில் பலர் நதியில் இறங்கி தங்க நாணயங்களைத் தேடலாயினர்.

பலர் அப்பாறைகளைப் புரட்டி கரையில் தள்ளிவிட்டு தங்க நாணயங்களை சேகரிக்கலாயினர். அப்படியும் எல்லா நாணயங்களும் கிடைத்தபாடில்லை. ஆனால் இந்த சமாசாரம் அருகிலிருந்த கிராமத்திற்குப் பரவவே அக்கிராம மக்களும் அங்கு வந்தனர். நதியில் கிடந்த பாறைகளை யெல் லாம் உருட்டி கரை மீது போட்டு தங்க நாணயங்களை எடுக்கலாயினர்.

சூர்யவர்மன் இதைக் கண்டு இன்னும் தங்கநாணயங்களை அரசனின் பொக்கிசத்திலிருந்து கொண்டு வந்து நதியில் எறியத் தொடங்கினான். இந்தவிதம் பலமுறை செய்ய அந்தக்குறுகிய கணவாயிலிருந்த எல்லாப் பாறைகளையும் ஊர் ஜனங்களைக் கொண்டே எல்லாக் கற்களையும் அப்புறப்படுத்தினான். ஊர் ஜனங்களுக்கு தங்கநாணயம் கிடைக்கும்படி வழி செய்தான்.

அந்தக் கற்களை அப்புறப்படுத்தியதில் நதியின் நீர் தேங்கி நிற்காமல் சரியாக ஓட ஆரம்பித்தது.அப்போது தான் ஜனங்களுக்குச் சூரியவர்மன் செய்த யுக்தி தெரிந்தது. அவனை மகாமேதாவி என்று கொண்டாடலாயினர்.



அவந்திவர்மனும் அவனது யுக்தியைப் பாராட்டி மேலும் விசேட வெகுமதிகள் கொடுத்து கௌரவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்து செயற்படுதல்

சுருக்க வரலாறு:

ஜனவரி 1, 1978 அன்று தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாட்டின் திருவண்ணாமலையில் பிறந்த நித்தியானந்தர், நம்முடன் வாழும் தன்னை உணர்ந்த ஒரு ஞானி சிறுவயது முதலே இறுதி உண்மையை உணரும் நோக்கில் தீவிர முனைப்புடனும் விடா முயற்சியுடனும் நீண்டகாலம் கடுமையான தவத்தை மேற்கொண்டார். இமயம் முதல் குமரி வரை பாரதத்தின் பல்வேறு இடங்களுக்குச் சென்று இந்தியாவிலும் நேபாளத்திலும் பல தலைசிறந்த குருமார்களிடம் யோகம், தந்திரம் மற்றும் கிழக்கின் பல அதிநுட்ப இரகசியங்களை பயின்றார். ஜனவரி 1, 2000 அன்று தனது இருபத்திரெண்டாவது வயதில் ஞானமடைந்தார். இறுதி விழிப்புணர்பு நிலை மலர்ந்தது. இறுதி ஆனந்த நிலை அல்லது நித்ய ஆனந்த நிலையை அடைந்தார்.

பரமஹம்ஸரின் நோக்கம் ஒவ்வொரு தனி மனிதனுடைய உள்ளார்ந்த ஆற்றலையும் மெய்யாக்க உதவுவதே அவருடைய அனுபவ பூர்வமான மற்றும் பரிவுமிக்க அணுகுமுறையாலும் மனிதனின் அடிப்படை இயல்பு பற்றிய ஞானப் பார்வையினாலும் பரம ஹம்ஸர் தொடர்ந்து உலகெங்கிலும் உள்ள இலட்சக்கணக்கான வாழ்க்கையை தொட்டு மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்.

பரமஹம்ஸரின் தெய்வீகமான குணப்படுத்தும் தொடுதல் ஆனந்தா ஹீலிங் (ஆனந்த தியான சிகிச்சை) என்ற பெயரில் ஒரு அறிவியல் பூர்வமான ஆன்மீக குணப்படுத்தும் முறையாக உருவெடுத்துள்ளது. அவர் உலம் முழுவதுமுள்ள மக்களை தனது நேரடியான தொடுதலினாலும், தீட்சை பெற்ற தியான சிகிச்சையாளர்களின் மூலமாகவும் ஒன்றை தலைவலி முதல் புற்றுநோய் வரையிலான பல வியாதிகளையும் குணப்படுத்துகிறார். 4 ஆண்டுகளில் 15 இலட்சம் மக்கள் தியான சிகிச்சை மூலம் குணம் பெற்றிருக்கிறார்கள்.

நித்தியானந்த அறக்கட்டளை பரமஹம்ஸர் நிறுவிய தியானத்திற்கான உலகலாவிய இயக்கமாகும். அதன் ஆன்மீக மையம் தியானபீடம் இந்தியாவில் பெங்களூரில் உள்ள பிடதி என்னும் இடத்தில் இருக்கிறது. மேற்கத்திய பகுதிக்கான தலைமையகம் அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சலீஸில் இருக்கிறது. தியான பீடம் உலகம் முழுவதிலும் உள்ள 33 நாடுகளில் 1200 மையங்களில் இயங்கிக்கொண்டிருக்கிறது. தனி மனித மாற்றத்தின் மூலம் மனித இன மாற்றத்திற்காக ஸ்திரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

நடைமுறைப் பிரச்சினைகள் குறித்த பரமஹம்சரின் தெளிவான விளக்கங்களும் எளிமையான சக்தி வாய்ந்த தியான முறைகளும் உடல், உணர்ச்சி மற்றும் ஆன்மீக நிலைகளில் தனி மனித மலர்ச்சிக்கு உதவுகிறது. இந் நோக்கத்துக்கு உதவிய அவர், உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான ஆனந்த சேவர்கள் என்னும் தன்னார்வத்தொண்டர்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

நவீன மேற்கத்திய முறையான தர்க்கம் மற்றும் நிரூபணத்தையும் புராதனமான கிழக்கத்திய முறையான ஆன்மீகத்தையும் இணைப்பதற்கான பரமஹம்சர் தன்னையே ஒரு உயிருள்ள சோதனைச் சாலையாக வழங்கி உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகளுடன் இணைந்து செயற்பட்டு மனித குல நன்மைக்காக அறிவியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் காலமாகவும் திகழ்கிறார்.

## ஆன்மீகம் 01



பரமஹம்ஸ நித்தியானந்தர்

உங்கள் அனைவரையும் அன்புடனும் மரியாதைகளுடனும் வணங்கி வரவேற்கிறேன்.

நீங்கள் அனைவரும், உங்கள் அறிவை வளப்படுத்திக் கொள்ளவும் வாழ்க்கையைப் பற்றிய புதிய பார்வையைப் பெறவும் உங்கள் வாழ்க்கையை சிறப்பான வழியில் வாழ இயலுமா என்று தெரிந்து கொள்ளவும் சில எதிர்பார்ப்புகளுடனும் சில நம்பிக்கையுடனும் வந்திருக்கிறீர்கள்.

> **சுவாமி நித்தியானந்தரை அறியாதவர்கள் இல்லை என்று கூறுமளவில் சர்ச்சைக்குரியவராக மாறியுள்ள சுவாமிகளின் ஆன்மீகப் பக்கம் மிகவும் பலமானது.**
>
> **தனது சொற்பொழிவுகளால் உலகம் முழுவதிலும் பல இலட்சக்கணக்கான பக்தர்களைக் கொண்டுள்ள சுவாமி நித்தியானந்தரின் போதனைகள் பற்றி நாம் அறிந்து கொள்வதால் எந்தத் தவறும் இல்லை.**
>
> **ரிஷி மூலம், நதிமூலம் பார்ப்பதை விடுத்து, சுவாமி நித்தியானந்தரின் போதனைகள் எத்தன்மையானவை என்பதை வாசகர்கள் அறியும் பொருட்டு அவரின் ஆன்மீகக் கருத்துக்கள் இங்கு தொடர்க்கின்றது. (ஆ.ர்)**

நாம் நிகழ்ச்சிக்குள் செல்வதற்கு முன் சில விடயங்களைச் சொல்லிவிட விரும்புகிறேன். அதனால் நீங்கள் இந்த நிகழ்ச்சியில் இருந்து அதிகபட்ச பலனைப் பெற முடியும்.

நீங்கள் இங்கு வருவதற்கு முன்பே பல இடங்களுக்குச் சென்றிருக்கலாம். பல ஆன்மீகப் பிரசங்கங்களைக் கேட்டிருக்கலாம். பல உத்திகளைப் பயிற்சி செய்திருக்கலாம். அதெல்லாம். சரி, ஆனால், ஒரு விடயம்: நீங்கள் இங்கு இருக்கும் பொழுது, இங்கு முழுமையாக இருங்கள், அவ்வளவு தான்.

நீங்கள் இதுவரை மற்ற இடங்களில் கற்ற அனைத்தையும் விட்டுவிட்டு இங்கு வாருங்கள். உங்கள் காலணிகளையும் மனதையும் வெளியே விட்டுவிடுங்கள் என்று சொல்லும் அறிவிப்புப் பலகையை வெளியே கண்டு இருப்பீர்கள். அதன் பொருள் என்னவென்று வியந்திருக்கலாம். அதன் பொருள்: நீங்கள் வெளியே காலணிகளை விடும் பொழுது, மனதையும் வெளியே விடுவதாகத் தீர்மானித்து விடுங்கள். இதுவரை நீங்கள் சேகரித்த அறிவனைத்தையும் உங்கள் காலணிகளுக்கு அருகிலேயே விட்டுவிட்டு உள்ளே வாருங்கள். நீங்கள் வெளியே செல்லும் பொழுது மீண்டும் எடுத்துக் கொள்ளலாம். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்! உங்கள் மனதை யாரும் எடுத்துக் கொண்டுவிட மாட்டார்கள். அது நிச்சயமாகப் பாதுகாப்பாக இருக்கும்.

மக்கள் உங்கள் காலணிகளை யாவது எடுத்துச் சொல்லக்கூடும். ஆனால்; உங்கள் மனதைக் கண்டிப்பாக தொடக்கூட மாட்டார்கள். நான் அந்த உத்தரவாதத்தைத் தருகிறேன்! ஏனெனில், மக்களால் அவர்களது மனதையே கையாள முடியவில்லை; அவர்கள் கண்டிப்பாக உங்களுடையதைத் தொடவோ, ஆராயவோ மாட்டார்கள்! (தொடரும்)

# பொதுநலவாய உச்சிமாநாடு பங்குபற்றுமா பிரித்தானியா?



இராணுவத்தினர் 2009 இல் தோற்கடித்ததிலிருந்து பல்லாயிரக்கான தமிழ் மக்கள் எவ்வித விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் பல பத்தாண்டுகளாக தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தம் நிறைவுக்குக்கொண்டுவரப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கத்தால் நாட்டில் போருக்குப்பின்னான மீளிணக்கப்பாட்டு முயற்சிகள் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீது திட்டமிட்ட ரீதியில் பல்வேறு சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இலங்கை அரசாங்கம் சட்ட ஒழுங்கை மீறி நடந்துகொள்வதாகவும் லண்டனைத் தளமாகக்கொண்டிருக்கும் சமாதானம் மற்றும் நீதிக்கான சிறிலங்கா அமைப்பு தனது புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான விசாரணைகள் இந்த ஆண்டின் முடிவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்களுக்கான உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என பிரித்தானியா மீது அதிக அழுத்தத்தை வழங்கும்.

இவ்வாறு லண்டனில் இருந்து வெளியாகும் **தி கார்டியன்** இதழில் **மார்க் ரவுன்சன்** மற்றும் **குஸன் கேஸ்வனி** ஆகியோர் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தடுத்துவைக்கப்படும் அரசியல் கைதிகள் மீதான சித்திரவதைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக இது தொடர்பான புதிய விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விசாரணைகள் இந்த ஆண்டின் முடிவில் நடத்தத் திட்டமிட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் உறுப்புநாட்டுத் தலைவர்களுக்கான உச்சி மாநாட்டை இலங்கையில் நடாத்தக்கூடாது என பிரித்தானியா மீது அதிக அழுத்தத்தை வழங்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளை இலங்கை

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் 26 ஆண்டு காலமாக தொடரப்பட்ட யுத்தத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறான யுத்த நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பில் இதில் தொடர்புடைய இரு தரப்பினர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கை அரசாங்கமானது தன் மீது சுமத்தப்பட்ட இவ்வாறான யுத்தகால மீறல்களிலிருந்து தப்பிக்கொள்வதற்காக தனது நாட்டை பிரபலமான சுற்றுலா மையமாக மாற்றிவருவதுடன் இவ்வாண்டின் இறுதியில் தனது நாட்டில் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டை நடத்துவதற்கான தாயர்படுத்தலில் ஈடுபடுகிறது.

இலங்கை தலைமை மீது அழுத்தம் இடப்படாது விட்டால் நாட்டில் ஏற்படுத்தப்படவுள்ள அமைதி நிலையைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கான மிகப்பெரிய வாய்ப்பு இழக்கப்படும் அபாயம் தென்படுவதாக சமாதானம் மற்றும் நீதிக்கான சிறிலங்கா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாண்டு நவம்பரில் இலங்கையின் தலைநகர் கொழும்பில் நடத்தத்திட்டமிட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்களுக்கான உச்சிமாநாட்டைப் புறக்கணிக்குமாறு பிரித்தானிய மகாராணியார் மற்றும் டேவிட் ஹெமரூன் ஆகியோர் மீது அழுத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுத் தொடர்பான அழுத்தங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலும்கூட இந்த உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதா இல்லையா என்ற தொடர்பாக தாம் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்வும் தற்போது இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு நீண்டகாலம் இருப்பதாகவும் பிரித்தானிய வெளியுறவுச்செயலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் போருக்குப் பிந்திய மீளிணக்கப்பாட்டு முயற்சிகள், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்றன தொடர்பில் பிரித்தானிய அரசாங்கம் பொதுவான மற்றும் தனிப்பட்ட ரீதியில் தெளிவான நிலைப்பாட்டைக்கொண்டுள்ளது என அந்நாட்டின் வெளியுறவுச் செயலகப் பேச்சாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் 40 ஆயிரம் வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா. விசாரணை அறிக்கையில் முன்னர் தெரிவிக்கப்பட்ட நிலையில் இலங்கை தன் மீது குற்றம் சாட்டப்பட்ட போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுயாதீனமான, நம்பகமான விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதைத் தூண்டும் விதமாக கடந்த வியாழன் அன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. (தொடரும்)

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு எதிர்ப்பு; ஜெயாவுக்கு சுப்பிரமணியசுவாமி மிரட்டல்

(கொழும்பு)

**சென்னையில் நடைபெறும் ஐபிஎல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் விளையாட அனு மதிக்கக் கூடாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்திருக்கும் வேண்டுகோளுக்கு அவரது ஆட்சியை இழக்க வேண்டிய நிலை உருவாகும் என ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி மிரட்டல் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

இலங்கையில் தமிழின இனப்படு கொலைக்கு சர்வதேச விசாரணை நடத்த வேண்டும். தமிழீழத் தனியரசுக்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தில் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஐபிஎல் போட்டிகளில் இலங்கை வீரர்களை அனுமதிக்கக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இதைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.

அதில் தமிழர்களின் உணர்வுகளை மதித்து ஐபிஎல் போட்டிகளில் இலங்கை வீரர்களை விளையாட அனுமதிக்கக்கூடாது என்று பிசிசிஐ க்கு அறிவுறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கும் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி ஜெயலலிதாவின் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு எதிரான இந்தக் கோரிக்கை அரசியல் சாசனத்துக்கு எதிரானது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தை சிறப்பு ஆயுதப் படையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து போட்டிகளை நடத்த இலங்கை வீரர்களை அனுமதிக்க வேண்டும்.

அப்படி இல்லை என்றால் சென்னையை பதற்றப் பகுதியாக அறிவித்து ஜெயலலிதாவை ஏற்கச் செய்ய வேண்டும்.

இதையும் ஏற்க மறுத்தால் அரசியல் சாசனத்தின் 356 ஆவது பிரிவை பயன்படுத்தி ஜெயலலிதா அரசை, ஜனாதிபதி நீக்கச் செய்யலாம்.

அத்துடன் மத்திய அரசு ஜெயலலீதாவுக்கு 256 இன் கீழ் சில வழிகாட்டு முறைகளை அனுப்ப வேண்டும் என்று கூறியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-2)

# சக்தி வாய்ந்த நாடுகள் இரட்டை வேடம்

*கோத்தபாய தெரிவிப்பு*

சக்திவாய்ந்த நாடுகள் இலங்கை விடயத்தில் இரட்டை வேடம் பூண்டிருப்பதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன் றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாடு போன்ற முக்கியமான மாநாடுகளின் போதும் சக்தி வாய்ந்த நாடுகளும் அவற்றின் ஆதரவு நாடுகளும் இலங்கை விடயத்தை கையாள்கையில் இரட்டை போக்கை கடைப்பிடிக்கின்றன. இலங்கையின் அடைவுமட்டங்கள் குறி த்து அந்த நாடுகள் அவதானம் செலுத்துவ தில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையின் பேச்சுவார்த்தை நடத்தும் போது இலங்கையின் அடைவு மட்டங்களை பாராட்டுகின்ற அந்த நாடுகள் சர்வதேச நாடுகளுடன் செயற்படும் போது மாற்று நிலைப்பாட்டில் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்தியாவை கூறுபோட இலங்கை மீது அழுத்தம்

*பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு*

இந்தியாவை கூறு போடுவதற்காகவே மேற்கத்தேய நாடுகள் இலங்கை மீது பழி சுமத்துவதாக பிரதமர் தி.மு ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

போகம்பரைச் சிறைச்சாலையில் இடம் பெற்ற விழாவொன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

வெளிநாட்டு ஆதிக்கங்களை இலங்கை மீது திணித்து இனங்களுக்கிடையில் மோதல்களை ஏற்படுத்தி யுத்தத்தின்மூலம் மனிதப் படுகொலைகளை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சி செய்துள்ளன.

நாம் வெளிநாட்டவர்களுடன் எந்த பிரச்சினைக்கும் செல்வதில்லை. எமக்கு யாருடனும் பொறாமையோ, குரோதமோ இல்லை. இந்த நாட்டில் பிரதானமான நான்கு இனங்கள் வாழ்கின்றன. இம்மக்களின் மதம், கலாசாரம் போன்றவைகளில் பிரிவினைகளை ஏற்படுத்தக்கூடாது.

அனைவரும் இலங்கையர் என்ற வகையில் ஒருமித்து வாழ வேண்டும். மதங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டால் எந்த ஒரு இனத்துக்கும் சுதந்திரமாக வாழமுடியாது. இது எதிர்காலச் சந்ததிகளை கடுமையாக பாதித்து விடும்.

சிறைக்கைதிகளை நாம் ஒருபோதும் முட்டாள்கள் என தீர்மானிக்கக்கூடாது. அவர்கள் சிறந்த திறமைசாலிகளாவர் என்றார். (அ-2)

# தமிழகம் வருவதை தற்காலிகமாக இடைநிறுத்திக் கொள்ளுங்கள்!

*இலங்கை பிரதி தூதுவர் அறிவுரை*

(கொழும்பு)

தமிழ் நாட்டில் தொடர்ந்தும் பதற்ற நிலையே காணப்படுவதனால் இலங்கையர்கள் தமிழ் நாடு வருவதனை சிறிது காலம் ஒத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்வதாக இந்தியாவுக்கான இலங்கை பிரதி உயர்ஸ்தானிகர் அமீர் அஜ்வாட் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் இலங்கையர்கள் தொடர்பிலான தற்போதைய நிலை குறித்து சென்னையிலுள்ள பிரதி உயர்ஸ்தானிகர் கூறுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயத்தின் முன்னாள் இந்தியர்கள் கடந்த வாரங்களில் போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பதற்ற நிலை காணப்பட்டது. தொடர்ந்தும் நாம் தமிழ் நாட்டின் நிலைவரம் குறித்து கண்காணித்து வருகின்றோம். முன்னேற்றம் தெரியும் வரை இலங்கையர்கள் தமிழ் நாட்டிற்கான தமது விஜயத்தை ஒத்தி வைப்பதே சிறந்தது எனவும் அவர் தமிழ் நாடு செல்லவுள்ள உல்லாசப் பயணிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும் உல்லாச பயணிகள் தமிழ் நாட்டை விடுத்து வேறு மாநிலங்களுக்கூடாக பயணம் செய்யலாமெனவும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது தமிழ் நாட்டின் பாதுகாப்பு நிலைமை ஓரளவு சீரடைந்துள்ளதென சுட்டிக் காட்டிய பிரதி உயர்ஸ்தானிகர் அமிர் அஜ்வாட் தமிழ் நாட்டிலுள்ள இலங்கை நிறுவனங்களுக்கும் முக்கிய பதவி வகிக்கும் உயரதிகாரிகளுக்கும் பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். (அ-2)

# தெற்காசியாவிலேயே மிகப் பெரிய புத்த பெருமானின் மெழுகுச் சிலை

தெற்காசியாவிலே மிகப்பெரிய புத்த பெருமானின் மெழுகுச் சிலை ஒன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் வெசாக் போயா தினத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொட்டாவ மாகும்புர புராதன விகாரைக்கு அருகிலுள்ள வயல் வெளிக்கு மத்தியில் 180 அடி உயரத்தில் இந்த மெழுகுச் சிலை அமைக்கப்படவுள்ளது.

தென் மாகாண அதிவேக நெடுஞ்சாலை ஆரம்பமாகும் இடத்துக்கு முன்பாக மாகும்புர நுழைவாயிலில் இந்த மெழுகுச் சிலையை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையொன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியையொட்டி நிர்மாணிக்கப்படவிருக்கும் இந்த அழகான மெழுகுச் சிலை சிங்கள கலாசாரத்தை பிரதிபலிக்கும் வண்ணம் அமைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இந்த புத்த பெருமானின் மெழுகுச் சிலை அமைக்கப்படுவதால் நாட்டுக்கும் இலங்கையிலுள்ள பௌத்த பீடங்களுக்கும் பெரும் புண்ணியமாகும் என்பதால் ஜனாதிபதியினால் 10 இலட்சம் ரூபா இதன் நிர்மாணப் பணிக்காக அர்ப்பணிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த மெழுகுச் சிலை அமைக்கப்படுவதற்கு ஏதுவாக இந்த குறிப்பிட்ட இடத்திலே 2600 புத்த பகவானின் சின்னஞ்சிறிய சிலைகளும் அமைக்கப்படவுள்ளன. (அ-2)




உலக காசநோய் தினத்தை முன்னிட்டு சங்கானை உருத்திரா முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சுகாதார தொண்டர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து சங்கானை பகுதி பொதுசுகாதார பரிசோதகர் தி. கிருபன் தலைமையில் நடத்திய விழிப்புணர்வு ஊர்வலத்தின் போது...

# வழக்கு தாமதமாவதால் அநேகருக்கு உளவியல் தாக்கங்கள் ஏற்படுகின்றன

*கண்டறியப்பட்டது என்கிறார் ஹக்கீம்*

வழக்குத் தாமதங்கள் காரணமாக ஏராளமானோர் உளவியல் தாக்கங்களுக்கும் உடல் சம்பந்தமான நோய்களுக்கும் ஆளாவதாக கண்டறியப்பட்டிருக்கிறது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஏழாவது தேசத்துக்கு மகுடம் கண்காட்சியோடு இணைந்ததாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பயன்பாடுகள் பற்றிய செயலமர்வில் உரையாற்றும் பொழுதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப்பட்டு உரிய தீர்ப்புகள் வழங்கப்படுவதற்கு மிகவும் கால தாமதமாவதாக ஜனாதிபதிக்கு கூட அநேகர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறான கடிதங்கள் ஜனாதிபதியினால் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது.

வழக்குகளை தாமதமின்றி விசாரித்து முடிப்பதற்காக ஒதுக்கப்பட்ட 150 மில்லியன் ரூபா உரிய முறையில் பயன்படுத்தப் படவில்லை. நிதிச் சேவை ஆணைக்குழுவின் ஊடாக மேற்கொள்ளப்படும் இந்த நிதியை சரிவர பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தாப்பினர்களினது ஒத்துழைப்பு இன்றியமையாதது.

இவ்வாண்டு இறுதிக்குள் குடியியல் மற்றும் குற்றவியல் சட்டங்களைப் பொறுத்தவரை மகத்தான மாற்றங்கள் நிகழவுள்ளன.

எனது அமைச்சின் கீழ் உள்ள அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் வழக்குத் தாமதங்களை வெகுவாக குறைப்பதற்கு பெரிதும் உதவக் கூடியவை என்றார். (அ-2)

# இடியுடன் கூடிய மழை பெய்யலாம்

(கொழும்பு)

நாட்டில் அதிகளவில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் அதிக அளவில் மழை பெய்யலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மாலை அல்லது இரவு வேளைகளில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யக்கூடும். மழை பெய்யும் காலப்பகுதியில் கடுமையான இடி மின்னல் காணப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு- கொழும்பு வரையான கடல் பகுதிகளில் அதிக அளவில் மழை பெய்யும். இதனால் இந்தப் பகுதியில் கடல் சில சந்தர்ப்பங்களில் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைசாராத தொழில் நிறுவனங்களின் ஊழியர்களுக்கான கல்வியையும் பயிற்சியையும் வழங்கினாலென்ன?

அறிமுகம்

எனக்கு மிகவும் தேவையானது என்னவென்றால்
என்னால் செய்ய முடிந்ததை சிறப்பாக
செய்ய வைக்கும் ஒரு நபர்
–எமர்சன்.

எமது மரபு வழியான எண்ணம், கவனம், திட்டம், வள ஒதுக்கீடு, கல்வி வளர்ப்பு, பாதுகாப்பு, தொடர் வளர்ச்சி எல்லாம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி நிறுவனங்களிலும் பெரிய அல்லது அரச தொழில்துறைகளிலும் உள்ளவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றன.

எமது தொழிற்படையில் 46 சதவீதத்தினர் தனியார் துறையிலும்,30 சதவீதத்தினர் சுயதொழில்களிலும் உள்ளனர். பரந்து கிடக்கும் ஒழுங்கமையாத தனியார் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் உழைப்பாளர் மற்றும் சிற்றூழியரிடம் கவனமின்மை, பொறுப்பின்மை, மகிழ்ச்சியின்மை, வெற்றியின்மை குவிந்து கிடக்கின்றன.

இதனைக் குறைப்பதற்கு இவர்களுக்கான கட்டாய கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவது அவசியமாயுள்ளது. இது பற்றியே இன்று கலந்துரையாடுவோம். புதிய திசைகளில் சிந்திப்பது பலமான புதிய வளர்ச்சிகளுக்கு நிச்சயம் உதவும்.

சிறு நிறுவன பணியாளர்கள் ஒரு நோக்கத்தைக் கைவிடாமல் பற்றிக் கொண்டிருக்கும் மன உறுதிக்கு ஒரு மாற்று என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்கிறார். ஒரிசின் சுவற் மாடென் (orisonswett marden). எமது நாட்டில் ஏராளமான சிறிய மற்றும் நடுத்தரக் கடைகள், தேநீர்ச் சாலைகள், வீதியோர சிறுவியாபாரம், சந்தைகளின் தரையின் பொருள் குவித்து விற்கும் காய்கறி வியாபாரம், துவிச்சக்கர வண்டிகளின் திருத்தங்கள் காணப்படுகின்றன.

விதிவிலக்கான உயர் அலுவலர்கள் மற்றும் உயர் தொழில் புரியும் கணவான்கள் தவிர பெரும்பாலான மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு இத்தகைய தொழில்துறை நிறுவனங்களையே நாடுகின்றனர். இவை தனியாருக்கு சொந்தமானவை. இவற்றில் பணியாளர்களையும் உரிமையாளர்களையும் பெரியவில் வேறுபடுத்த முடியாது. இவர்களது கவனம் தமது பொருட்களை காசுக்கு விற்றுவிடுவது.

இலாபத்தைப் பெற்றுக் கொள்வது. தமது விற்பனைப் பொருள், விலை, இலாபம் என்ற சுயநோக்கு மாத்திரமே இவர்களிடம் உள்ளது. பணியாளர்களும் இதேமாதிரி பணியாற்றும் படி எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

பணியாளர்களின் உடை, சுத்தம், மொழி, முகமலர்ச்சி , வாடிக்கையாளரை மரியாதை மிக்கவராக பார்க்கும் அணுகுமுறை போன்ற எதிலும் செம்மையில்லை. திருத்தமில்லை. பெருமைப்படத்தக்க பண்புக் கோலங்களில்லை. சில விதிவிலக்கான சிறுதொழில் நிறுவனங்கள் சில இடங்களில் இருக்கக் கூடும்.

பெரும்பாலான பணியாளர்களிடம் அவை இல்லை. தமது நிறுவனத்துக்கு வந்து பணம் கொடுத்து பொருள் அல்லது சேவைகளை பொதுமக்கள் வாங்குவதால்தான் தங்களுக்கு தொழில் கிடைக்கின்றது. தாம் வாழ்வதற்குரிய நம்பிக்கை மிக்க வாய்ப்புக்கள் கிடைக்கின்றன என்ற அறிவு அடிப்படையிலான உணர்வு இந்தப் பணியாளர்களிடம் வளர்க்கப்படவில்லை.

தொழிலுக்கு செல்ல வேண்டிய குடும்ப, சமூக சூழலினால் வீடுகளிலிருந்து இந்த தொழில் நிறுவனங்களுக்குள் நுழைந்தவர்களாகவே இவர்கள் காணப்படுவர். மெல்ல மெல்ல பார்த்து பிழைகள் விட்டு, திருந்தி சிறந்த பணியாளர்களாகி விடுவார்கள் என்ற பலவீனமான எதிர்பார்க்கைகளை தொழில் நிறுவன உரிமையாளர்கள் கொண்டுள்ளனர்.

ஒழுங்காக வடிவமைக்கப்படாத இந்த வியாபார தொழில் நிறுவனங்களில் பணிபுரிவோரிடம் பொதுவான சில பண்புகள் காணப்படலாம்.

✷ பாடசாலைப்படிப்பை இடையில் விட்டு விலகியவர்கள்

✷ வேலைபற்றிய தெளிவான எண்ணம், நாட்டம் தெரிவு எதுவும் இல்லாதவர்கள்.

✷ வேலை தொடர்பான நேரம், சம்பளம், வேலை ஒழுங்கு என்பன பற்றி தீர்க்கமான கருத்து எதுவும்



கல்வித் தரிசனம்

இல்லாதவர்கள்

✷ பல மாதிரி தொழில் நிறுவனங்களில் வேலை செய்து மாறி மாறி – பல நிறுவனங்களில் பணிபுரிந்தவர்கள் அல்லது பல வகையான தொழில்களைச் செய்தவர்கள்.

✷ வாடிக்கையாளரை விளங்கிக் கொள்ளுதல் என்பது பற்றிய எந்தவித முன்னறிவும் வழங்கப்படாதவர்கள் வாடிக்கையாளரை கௌரவமாக நடத்துதல், அவர்களை திருப்தியடையச் செய்தல் என்பன தொடர்பான எவ்வித அறிவும் பயிற்சியும் வழங்கப்படாதவர்கள்

ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் கார்கில்ஸ் போன்ற சங்கிலித் தொடரான பகட்டான நவீன விற்பனை மையங்களிலும் பணிபுரியும் பணியாளர்களுடன் ஒப்பிடும் போது இவர்கள் நிராகரிக்கப்பட்டவர்களாக அல்லது புறந்தள்ளப்பட்டவர்களாக உள்ளனர்.

உடல் வேலை செய்யும் பணியாளர்களிலும் இருவர்க்கங்கள் உள்ளன. ஒழுங்கான, பெரிய வியாபாரம் மற்றும் சேவை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மேல் வர்க்கத்தினர் போலவும் இங்கு குறிப்பிடப்படும் ஏனையவர்கள் கீழ் வர்க்கத்தினர் போலவும் எல்லா நிலைகளிலும் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். நன்கு கவனமாக வடிவமைக்கப்பட்ட ஊழியர் சார்ந்த பாரபட்சமான ஏற்பாடாக, முறைமையாக இவை காணப்படுகின்றன.

இந்தப் பாரபட்சங்களை தெளிவாக உணர்ந்தாலென்ன? இவர்களுக்கும் நல்லகல்வி அல்லது சிறந்த பயிற்சியை குறுங்காலத்தில் வழங்கினால் என்ன? இதில் தொழில் நிறுவன உரிமையாளர்கள் அக்கறை காட்டினால் என்ன? இதற்கென அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களை பொருத்தமான மாதிரியில் வடிவமைத்தாலென்ன? இத்தகைய பயிற்சிகளின் நிறைவில் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கினால் என்ன? அத்தகைய சான்றிதழ் பெறாதவர்கள் பணியாற்றமுடியாதென பிரகடனம் செய்தாலென்ன? இவைபற்றிய சமுதாய ஒப்புதல்களைப் பெற்றாலென்ன?

இத்தகைய கேள்விகளுக்கு விடைகளை செயல்வடிவில் நாம் பெற தயங்குதல்

✷ திருத்தமற்ற, கடினமான சொற்களைப் பயன்படுத்தி உரையாடுதல்

✷ முகமலர்ச்சியுடன் வரவேற்றல், உரையாடுதல் என்ற நிலைகளை ஒருபோதும் பின்பற்றாதிருத்தல்

✷ வணக்கம், நன்றி. மீண்டும் வாருங்கள் போன்ற தொடர்பாடல் சார்ந்த இனிய சொற்களை மகிழ்ச்சியுடன் சொல்வதில் விருப்பம் இல்லாதிருத்தல்

✷ வாடிக்கையாளர் தமது தொழிலின் நிரந்தரத் தன்மைக்கு உதவும் என்பதை உணராமல் அவர்களை தொந்தரவாக எண்ணி சலிப்புடன் உரையாடுதல்



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

இந்தப் பலவீனங்கள் தவறுகளே தவிர, குற்றங்களல்ல. ஆழமான எதிர்மறை நோக்கங்களுடன் பணியாளர்கள் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. உன்னதமான ஒரு தொழில்முறைப் பண்பாடு எமது சமூகத் தலைவர்களால், அறிஞர் மண்மூடிப் போய்விட்டன.

வட அமெரிக்க நாடுகளில் தொழிற்பிரிவும் உடல் உழைப்பை தாழ்வாக நோக்கும் செயல்களும் எல்லா நிலையிலும் ஒழிந்து போய் விட்டன.இந்த உழைப்பாளருக்கும் நிறுவனப் பணியாளருக்கும் எத்தகைய கல்வியையும் பயிற்சியையும் கட்டாயமுறையில் வழங்கு

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

றாகவேண்டும். அதுவே சமூக மேம்பாடாகும். நல்ல மானிட உறவுகளின் தொழில் சார் அடையாளமாகும்.

### சிற்றூழியர்களுக்கான குறுங்கால கல்வி

அண்மைக்காலங்களில் எமது சிற்றூழியர்களான இளைஞர்களிடம் பல முற்போக்கான மாறுதல்கள் தென்படுகின்றன. அவற்றுள் சில,

✷ தொழிலுக்குப் போவதற்கும் தொழில் முடிந்த பின்பு வீடு திரும்புவதற்கும் தனியான ஆடைகளை தெரிவுசெய்து வைத்திருத்தல்

✷ தொழில் செய்யும் அழுக்கான ஆடைகளுடன் பயணம் செய்வதை (பெரும்பாலும்) தவிர்த்துக் கொள்ளுதல்பணி முடிந்தபின் தம்மைச் சுத்தப்படுத்திக்கொண்டு வீடு செல்லுதல்

✷ தமக்கென தனிப்பட்ட போக்குவரத்து வாகனங்களை பராமரித்தலும் பொதுபோக்குவரத்தில் பயணம் செய்வதைத் தவிர்த்தலும்

✷ பெரும்பாலான இளைஞர்களான உடல் உழைப்பாளர்கள் தமக்கென தனியான மணிக்கூடுகளையும் செல்லிடத் தொலைபேசிகளையும் வைத்திருத்தல்

✷ தேவைப்படின் உரிய வேதனமும் ஊக்குவிப்பும் கிடைப்பின் நீண்டநேரம் தொடர்ந்து பணியாற்றல்

சுயமான தொழில் புரியும் பெரும்பாலான இளைஞர்களிடம் இந்த மாறுதல்கள் பரவி வருகின்றன. வியாபார நிறுவனப் பணியாளர்களிடமும் இந்த மாற்றங்கள் மகிழ்ச்சி தரும் வகையில் தென்படுகின்றன.

ஆனாலும் வாடிக்கையாளர்கள் சார்ந்த தொடர்புகளில் ஏராளமான பலவீனங்கள் உள்ளன.

✷ வாடிக்கையாளர்களை (தமது களைப்பு காரணமாக) கவனியாது பாராமுகமாக இருத்தல்

✷ வாடிக்கையாளர் விருப்பத்திற்கு ஏற்றமாதிரி பல தெரிவுகளை காட்டத் களால், கல்விமான்களினால் வளர்க்கப்படவில்லை.

தமது மதிப்பு, வாடிக்கையாளர் மதிப்பு, தமது மகிழ்ச்சி, வாடிக்கையாளர் மகிழ்ச்சி என்பன ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருப்பது பற்றி எவரும் ஒழுங்காக கற்பிக்கவில்லை. அதற்கே உரித்தான தொழில்சார் பயிற்சி எல்லோருக்கும் வழங்கப்படவில்லை. அது சட்டமாக்கப்படவில்லை. தொழிலில் இணைவதற்கும் தொழிலில் நீடித்திருப்பதற்கும் ஊழியருக்கான இத்தகைய கல்வியும் பயிற்சியும்அவசியமென வலியுறுத்தப்படவில்லை.

ஆனால் நாமும் நமது தொழில் நிறுவனங்களும் அங்குள்ள பணியாளர்களும் முன்னேறாமல் தொடர்ந்திருக்கவேண்டுமா? அவ்வாறு இருத்தல் சாத்தியமாகுமா? இல்லை.

சிறுவியாபாரம், சிறுகைத்தொழில், சிறிய சுய தொழில், சிறு போக்குவரத்துச் சேவை போன்ற பலவற்றிலும் பணியாற்றும் உடல் உழைப்பாளர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கென குறுங்காலக்கல்வியும் பயிற்சியும் வழங்கப்படவேண்டும். அதற்கான சான்றிதழ் வழங்கப்படவேண்டும். சான்றிதழ் பெறுவதற்குரிய வழிமுறையை தொழில் வழங்குநர்கள் உதவியுடன் தொழில் அமைச்சும் வர்த்தக சங்கங்களும் உருவாக்கவேண்டும்.

கனடா நாட்டில் இத்தகைய தொழில்தகுதி சான்றிதழ் கற்கைகளை குறுங்காலத்தில் நடத்தும் சினேக்கா போன்ற பலகல்லூரிகள் தொடர்ந்து இயங்கி வருவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### உடல் உழைப்பாளரும் உன்னதமானவர்களே

கல்வி, வேலை , சுகாதார வசதி, வாழ்க்கைமுறை இவையெல்லாவற்றிலும் உடல் உழைப்பாளரை கீழ் நிலையில் வைத்திருந்த பழைய முறைமைகள் எல்லா நாடுகளிலும் வது? சில விடயங்கள் பரிசீலனைக்கு உரியன.

✷ ஒரு விடுமுறை தினத்திலும் இரண்டு வேலை நாட்கள் மாலை வேளைகளிலும் இதனை வழங்கலாம்.நிறுவனப் பணியாளர் சுழல் முறையில் இந்தக்கல்வியைப் பெறுவதற்கு தொழில் நிறுவனங்கள் விடுப்பு வழங்கலாம்.

✷ மூன்று மாதங்களுக்கு 60 மணித்தியாலங்கள் இக்கல்வியை வழங்கினால் போதுமானது.

✷ கற்பித்தலும் பயிற்சியும் செய்முறைகளுடன் வழங்கப்படலாம். கற்கை நெறிமுடிவில் சோதனைகள் அவசியமில்லை. தேவையெனில் வாய்மொழியிலான ஒரு மணித்தியால சோதனையை நான்கு கட்டங்களில் நடத்தலாம்.

✷ சுத்தமான உடை, சுகா தாரப் பழக்கம், இதமான தொடர்பாடல், உயர்வான சுய கணிப்பு, தொழிலில்பற்றுதல், சேமிப்பு தொடர்பான விடயங்களும் கருவிகள்சார் பயிற்சியும் கற்பிக்கப்படுதல் வேண்டும்.

✷ அடிப்படைக் கல்வித்தகுதி, வயது எல்லை, பால் வகைமை போன்ற எந்தக்கட்டுப்பாடுகளும் விதிக்கப்படலாகாது.

✷ விரும்பினால் கற்பவர்கள் தமது உயர் தகைமைக்காக இப்படிப்பை தொடர்வதற்கான ஏற்பாடுகளையும் திட்டமிட வேண்டும் பணியாளர்களிடம் படிப்புக் கட்டணம் பெறுதல் கூடாது ஆனால் கற்கை நெறி காலத்தில் தேநீர், சிற்றுண்டி என்பன இலவசமாக வழங்குதலும் சிறு ஊக்குவிப்பு தொகை கொடுத்தலும் விரும்பத்தக்கது. நகர்ந்து செல்லும் ஆசிரிய அணியொன்று (Mobile teaching Team) உருவாக்கப்படுத்தலும் விரும்பத்தக்கது. இத்தகைய புதிய முயற்சிகளை முன்னெடுப்பதால் மகிழ்ச்சியான பணியாளரும் குதூகலமான தொழிற் சூழலும் பெருமைக்குரிய சமுதாய உறவு முறைகளும் நிச்சயம் வளர்ச்சியடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி என்ற கட்டிலில் அமர்வதற்காய் இலங். விடயத்தை பேசப் பயந்த தி.மு.க



தி.மு.க செயற்குழு திங்கட்கிழமை நடந்து முடிந்திருக்கிறது. 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பொதுவாக்கெடுப்பு, போர்க் குற்ற விசாரணை போன்றவற்றை முன்னிறுத்தி இந்தியாவே தக்கதொரு தீர்மானத்தை ஐ.நா. சபையில் கொண்டுவர வேண்டும் என்பது முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுதவிர இலங்கையில் நடக்கும் கொமன்வெல்த் அமைப்பு கூட்டத்தில் மற்ற சில நாடுகளே கலந்து கொள்ளாத நிலையில் இந்தியா அந்த மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இந்த செயற்குழுவில் ஏன் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை விட்டு விலகினோம் என்பதை விளக்குவதே முக்கிய நோக்கமாக தி.மு.க. தலைவர்களுக்கு இருந்திருக்கிறது. வழக்கமாக செயற்குழுவில் பேசும் தி.மு.க. தலைவர் கருணாநிதி இந்த முறை சிறப்புரை ஆற்றவில்லை. அதற்கு பதில் தி.மு.க. பொருளாளர் ஸ்டாலினும் பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகனும் மட்டும் பேசியிருக்கின்றனர். 16 தீர்மானங்களையும் கட்சியின் தீர்மானக்குழு உறுப்பினர்கள் முன்மொழிய செயற்குழு வழிமொழிந்திருக்கிறது.

இந்த தி.மு.க செயற்குழுவிற்கு பின்னால்தான் தி.மு.க.வின் அடுத்த கட்ட செயற்திட்டம் இருக்கிறது. தமிழகத்தில் இலங்கை தமிழர் பிரச்சினை ஏறக்குறைய பத்தாண்டுகளுக்குப் பின்னர் புதிய வடிவம் பெறுகிறது. கடந்த 19 ஆம் திகதி காங்கிரஸ் கட்சியுடனான உறவை முறித்துக் கொண்ட பின்னர் தி.மு.க.விற்கு இலங்கை தமிழர் பிரச்சினை பற்றிப் பேசும் அரிய சுதந்திரம் இப்போது கிடைத்திருக்கிறது. இலங்கை தமிழர்களுக்கு ஒரு கட்டத்திற்கு மேல தீவிரமாக பேசினால் சோனியா காந்தி கோபித்துக்கொள்வாரோ என்ற நிலை தி.மு.க.விற்கு 2004 முதல் 2009 வரை இருந்தது. போரின் உச்சக்கட்டத்தில் மனிதச்சங்கிலிப் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம், சட்டமன்றத்தில் போர் நிறுத்த தீர்மானம் என்று பல்வேறு முயற்சிகளை திராவிட முன்னேற்றக்கழகம் எடுத்தாலும் ஏதோ ஓர் இனம்புரியாத நெருக்கடியில் அக்கட்சி சிக்கிக் கொண்டே தவித்தது. குறிப்பாக ஆட்சி என்ற கட்டிலில் 2006 முதல் 2011 வரை அமர்ந்திருந்த தி.மு.கவிற்கு இலங்கை தமிழர் பிரச்சினை காங்கிரசுடன் மேலும் நெருங்கிச் செல்வதற்கான தடையாகவே இருந்தது.

தி.மு.கவின் இந்த தர்மசங்கடம் தமிழகத்தில் உள்ள மற்ற கட்சிகளுக்கு ஆதரவு களத்தை அமைத்துக் கொடுத்தது. எப்போதும் அளவுடன் தி.மு.கவை குறை கூறும் கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட இந்தமுறை தி.மு.கவை கடுமையாகவே விமர்சித்து வந்தன. காங்கிரசனுடன் தி.மு.க. கூட்டணி தொடர்ந்த ஒரே காரணத்தை மனதில் வைத்து இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தி.மு.க. தலைவர் கருணாநிதியை தீவிரமாக சாடின. அதற்காக நான் ஒரு கம்யூனிஸ்ட் என்றும் தி.மு.கவையா இப்படி விமர்சிப்பது என்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதியே கம்யூனிஸ்டுகளிடம் சில நேரங்களில் அறிக்கை விட்டு ஆறுதல் தேட வேண்டிய சூழ்நிலை எழுந்தது. அதேபோல் இலங்கை தமிழர்களுக்காக போராடும் தமிழர் அமைப்புகள் தி.மு.க. ஆட்சியிலிந்த வரை காங்கிரஸை எதிர்த்து மட்டும் பிரசாரம் செய்து, தமிழகத்தில் அக்கட்சியை தனிமைப்படுத்தின.

ஆனால், தி.மு.க.மாநிலத்தில் ஆட்சியை விட்டுஇறங்கியதும் அந்த அமைப்புகளின் யுக்தி வேறு வகையில் அமைந்தது. தி.மு.க, காங்கிரஸ் ஆகயி இருகட்சிகளையும் அந்த அமைப்புகள் தாறுமாறாக விமர்சிக்கத் தொடங்கின. ஒருகாலத்தில் இலங்கை தமிழர் பிரச்சினையில் முன் எச்சரிக்கையாகவே கருத்துச்சொன்ன முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. இந்தமுறை தி.மு.கவை எப்போதும் இல்லாத அளவிற்கு அந்த பிரச்சினையில் அட்ராக் பண்ணியது. துரோகம் செய் தது தி.மு.க. என்ற பிரசாரத்தை இந்த கட்சிகள் எல்லாம் ஜெட் வேகத்தில் மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சென்றன. இலங்கை தமிழர் பிரச்சினையில் இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை, இலங்கைப் போர்க் குற்றங்களை விசாரிக்கவேண்டும் என்றெல்லாம் காரசாரமான தீர்மானங்களை சட்டமன்றத்திலேயே கொண்டு வந்தது அ.தி.மு.க. மற்ற கட்சிகளையும் வியக்க வைத்தது. ஆகவே, தி.மு.க.வை பொறுத்த மட்டில் இலங்கை தமிழர் பிரச்சினையில் சகல துறையும் நெருக்கடியில் சிக்கிக் கொண்டது.

இதுபோன்ற சூழ்நிலையில்தான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுவில் இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு வந்தது. அதில் கடுமையான நிலைப்பாட்டை எடுத்து காங்கிரஸிலிருந்து கழற்றிக்கொள்ள வேண்டும் என்ற முடிவை முதலில் எடுத்தார் முன்னாள் முதல்வர் கருணாநிதி. அதனால்தான் முதலில் அமெரிக்கத் தீர்மானத்தில் இந்தியா ஓட்டுப் போட வேண்டும் என்றார். பிறகு அந்த தீர்மானத்தில் ஓட்டுப்போட்டால் மட்டும் போதாது சில திருத்தங்களை கொண்டுவர வேண்டும் என்றார். கடைசியில் மத்திய அமைச்சர்கள் ஏ.கே. அந்தோனி, ப.சிதம்பரம், குலாம் நபி ஆசாத் ஆகியோர் சென்னை வந்து கருணாநிதியை சந்தித்தபோது புதிதாக மூன்றாவது கோரிக்கை ஒன்றையும் வைத்தார். அதுதான் இந்திய நாடாளுமன்றத்தில் அமெரிக்கத் தீர்மானத்தில் இன்னென்ன திருத்தங்கள் கொண்டு வரப் போகிறோம் (இனப்படுகொலை, சர்வதேச விசாரணை, காலவரம் பற்ற விசாரணை) என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானம். இது காங்கிரஸ் கட்சியை முன்னும் போகவிடாமல், பின்னும் வரவிடாமல் செய்வதற்கு போடப்பட்ட கடிவாளம் என்றே சொல்ல வேண்டும்.

மத்திய அரசுக்கு தங்கள் ஆதரவை வாபஸ் வாங்கிய தி.மு.க. பின்னர் தன் மத்திய அமைச்சர்களையும் ராஜினாமா செய்ய வைத்தது. அப்படி தி.மு.க. அமைச்சர்கள் ராஜினாமா செய்த 17 மணி நேரத்தில் தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின், ராஜினாமா செய்த மத்திய அமைச்சர் மு.க. அழகிரி ஆகியோர் வீட்டில் சி.பி.ஐ போய் நின்றது. கார் இறக்குமதி செய்யப்பட்ட விவகாரத்தில் முறைகேடு என்று கூறி நடத்தப்பட்ட விசாரணையில் அப்படி இறக்குமதி செய்யப்பட்ட கார்கள் சில அழகிரி அல்லது ஸ்டாலின் வீட்டில் நிற்கின்றன என்று தகவல் கிடைத்தது. அதனால் ரெய்டு செய்தோம் என்றது சி.பி.ஐ. ஆனால், இந்த ரெய்டு காங்கிரஸை கதி கலங்க வைத்தது. ஏற்கனவே சி.பி.ஐ மீது காங்கிரஸ் பீரோ அப் இன்வெஸ்டிகேஷன் என்ற குற்றச்சாட்டை நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி சுமத்தி வருகிறது. இந்நிலையில் இந்த ரெய்டால் அந்த குற்றச்சாட்டு மேலும் தீவிரமாகும் என்று நினைத்த காங்கிரஸ் கட்சி டேமேஜ் கன்ட்ரோல் முயற்சியில் இறங்கியது.

அதனால்தான் அது மாதிரியொரு பரபரப்பான சூழலில் கூடிய தி.மு.க. செயற்குழுவில் கடந்த 9 ஆண்டுகளில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசியல் தி.மு.க. இடம்பெற்றதால் தமிழகத்திற்கு என்னென்ன நன்மைகள் கிடைத்தன என்பதை தனியாக ஒரு தீர்மானமான போட்டிருக்கிறது. இந்த செயற்குழுவில் பேசிய ஸ்டாலின் அன்பழகன் போன்றோர்கூட, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நம் கோரிக்கைகள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்காத காரணத்தால்தான் காங்கிரசிலிருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என்ற ரீதியிலேயே பேசியிருக்கிறார்கள். தி.மு.க செயற்குழுவில் மத்திய அமைச்சராக இருந்து சமீபத்தில் பதவி விலகிய மு.க. அழகிரி கலந்து கொள்ளவில்லை. அதே போல் அவரது அணியில் இருக்கும் இன்னொரு முன்னாள் மத்திய அமைச்சர் நடிகர் நெப்போலியனும் கலந்துகொள்ளவில்லை.

இலங்கை தமிழர் விவகாரத்தைப் பொறுத்தவரை தி.மு.க. அதை இனி விடாது. காங்கிரசுடன் ஏன் நாங்கள் உறவை முறித்துக் கொண்டோம் என்று விளக்கம் அளித்த போது கூட, டெசோ அமைப்பின் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்து இருக்கிறார். அதையொட்டி விரைவில் தமிழகத்தில் தலைநகர் சென்னைக்கு வெளியே பிரமாண்டமான டெசோ மாநாடு ஒன்றை நடத்த திட்டமிட்டிருக்கிறது தி.மு.க. அதிலும் குறிப்பாக 1980 களில் நடத்தியது போன்று அகில இந்திய தலைவர்களை எல்லாம் அழைத்து அந்த டெசோ மாநாட்டை நடத்தவிருக்கிறது என்று சீனியர் லீடர்கள் மத்தியிலேயே பேச்சு எழுந்துள்ளது. அடுத்த டெசோ அமைப்பின் கூட்டத்தில் அதற்கான முறைப்படியான அறிவிப்பு வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டெல்லியில் சமீபத்தில் நடைபெற்ற டெசோ கருத்தரங்கில் காங்கிரஸ் தவிர மற்ற கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. அதற்கு தி.மு.க. காங்கிரசுடன் கூட்டணி வைத்திருந்ததே காரணம். ஆனால், இப்போது வெளியேவந்துவிட்ட தி.மு.க. நடத்தவிருக்கும் டெசோ மாநாட்டில் அகிலஇந்திய தலைவர்கள் பங்கேற்பார்கள் என்று கருதுகிறது. தி.மு.க அதோடு மட்டுமில்லாமல் அடுத்த நாடாளுமன்ற தேர்தல் வரை இலங்கை தமிழர் பிரச்சினையின் அழுத்தத்தை அப்படியே தமிழக அரசியலில் நிலைநிறுத்துவதே அ.தி.மு.க.வின் பிரசார யுக்திகளை முறியடிக்க உதவும் என்று தி.மு.க. தலைமை கருதுகிறது. அதற்கு எந்தவிதத்திலும் அ.தி.மு.கவும் சளைக்கவில்லை. தி.மு.க செயற்குழு நடந்த உடனேயே கொமன்வெல்த் அமைப்புக் கூட்டத்தில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதிவிட்டார்.

மத்திய நிதியை தமிழக அரசு முறையாக செலவிடுகிறது என்று பாராட்டியிருக்கும் இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எப்படியாவது அ.தி.மு.க கூட்டணிக்கு அச்சாரம் போட்டுவிட வேண்டும் என்று காய்நகர்த்துவது போல் தெரிகிறது. அதற்கு முன்பு அமெரிக்கத் தீர்மாணம் பற்றிய விவாதம் எழுந்த போது கூட, தமிழக முதல்வரும் தீர்மானத்தில் சில திருத்தங்கள் வேண்டும் என்று கோரிக்கை வைத்து பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறார் என்று சுட்டிக்காட்டியிருக்கிறனார். அதுமட்டுமன்றி, நாடாளுமன்றில் இலங்கைபற்றிய தீர்மாணம் கொண்டு வருவது பற்றி விவாதிக்க டெல்லியில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டத்தில்கூட தமிழக முதல்வர் எழுதிய கடிதத்தை சபாநாயகர் மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஆனால், இதுவரை காங்கிரஸ் எதிர்ப்பில் ஸ்டெடியாகச் சென்ற அ.தி.மு.விற்கு பல இலாபங்கள் கிடைத்துள்ளன. மாநில அரசுக்கு விரோதமாக இருக்கும் சூழ்நிலையை மத்திய அரசு மீது சுமத்தி பிரசாரம் செய்து கொண்டிருக்கிறது அ.தி.மு.க தலைமை. இதுபோன்ற சூழ்நிலையில் திடீரென காங்கிரசுடன் அ.தி.மு.க கைகோர்க்குமா என்பது மில்லியன் டொலர் கேள்வி. ஏனென்றால், அப்படியொரு முடிவை அக்கட்சி எடுப்பதற்கு காங்கிரஸ் முன்புபோல், தமிழகத்தில் தி.மு.கவுக்கோ, அ.தி.மு.கவுக்கோ மாற்று சக்தியாக இல்லை. அந்த அளவிற்கு வாக்கு வங்கியும் இல்லை. கடந்த உள்ளாட்சி தேர்தலில் அக்கட்சி பெற்ற வாக்கு வெறும் 5 சதவீதம் தான். இந்த வாக்கு வங்கிக்காக இதுவரை மேற்கொண்ட காங்கிரஸ் எதிர்ப்பையும், இலங்கை தமிழர் பிரச்சினையில் காட்டிய தீவிரத்தையும் அ.தி.மு.க குறைத்துக் கொள்ளுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு.


ஒரு புறம் டெசோ மாநாடு, சுதந்திரமான இலங்கை தமிழர் பிரசாரம் என்று தி.மு.க. புதிய அத்தியாயத்தை நோக்கி வேகமாகக் கிளம்புகிறது. மறுபுறம் அ.தி.மு.க தனது நிலைப்பாட்டில் மாற்றம் செய்யப் போகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இது கட்சிகளின் நிலைப்பாட்டிற்கு ஏற்றவாறு தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் அணி உருவாகும் என்பதே இப்போதைய நிலைமை.

எம். காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பில் அரசுடன் பேசுவேன்

## அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை தொடர்பில் விசாரிக்க சர்வதேச பொறிமுறை அமைத்தால் ஜனாதிபதி மேலும் பலம் அடைவார். எனவே அத்தகைய காரியத்தில் அமெரிக்கா இறங்காது என சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும் எனவும் இது தொடர்பில் அரசாங்கத்திற்கு தங்களுடைய யோசனையை முன்வைக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பில் மத்திய, தெற்காசியாவுக்கான அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் ஜெனீவா பிரேரணையிலுள்ள விடயங்களை இலங்கை செயற்படுத்தாவிட்டால் சர்வதேச பொறிமுறையொன்றை ஏற்படுத்த நேரிடுமென அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர் எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகாண வேண்டும். அதற்கு சர்வதேச தலையீடு தேவையில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட்டிருந்தால் இவ்வாறான சர்வதேச அழுத்தங்கள் ஏற்படாது. எனவே இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஜெனீவாவில் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை செயற்படுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட தேவையில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை முழுமையாக செயற்படுத்த வேண்டும்.

அதற்கான பொறிமுறைகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கையை பயமுறுத்தவே அமெரிக்கா ஜெனீவாவில் பிரேரணை கொண்டு வந்துள்ளது.

அது குறித்து அலட்டத் தேவையில்லை. அவ்வாறு செய்வதன் மூலம் ஜனாதிபதி மேலும் பலமடைந்து எதிர்க்கட்சி மேலும் பலவீனமடையும்.

அத்தகைய விடயத்தை அமெரிக்கா செய்யாது. தற்பொழுதுள்ள அரசியலமைப்பின் அடிப்படையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை செயற்படுத்த முடியும். 13 ஆவது திருத்தத்தையும் செயற்படுத்த முடியும் என்றார். (அ-2)

# காணாமல் போன சம்பவங்கள் குறித்து ஜெனீவாவில் முறைப்பாடு

நாட்டில் நடைபெற்ற போரின் போது காணாமல் போன, கடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக காணாமல் போனோர் பற்றி தேடிப்பார்க்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 5 ஆயிரம் சம்பவங்களில் 3 ஆயிரம் சம்பவங்கள் குறித்து ஜெனீவாவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 5 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அந்த அமைப்பின் செயலாளர் எஸ்.மகேந்திரம் தெரிவித்துள்ளார்.

எஞ்சியுள்ள 2 ஆயிரம் முறைப்பாடுகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் அமைப்பில் முறைப்பாடு செய்யப்படும். போர் இடம்பெற்ற மற்றும் அதன் பின்னரான காலப்பகுதியில் சுமார் 10 ஆயிரம் பேர் காணாமல் போயிருக்கலாம் எனவும் இவர்களில் 98 வீதமானவர்கள் தமிழர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உதாசீனமான போக்கைப் பின்பற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அரசு பரிந்துரைகளை நிறைவேற்ற கால அவகாசம் கோரவில்லை

## கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன்



ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையோ அல்லது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையோ நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் கால அவகாசம் கோரவில்லை. தமது சொந்த நிகழ்ச்சி நிரலான வடக்கு கிழக்கில் இன விகிதாசாரத்தை மேலும் மாற்றியமைக்கவும் மொழி, கலாசார ரீதியான அடையாளங்களை இல்லாதொழிப்பதற்குமே அரசாங்கம் முயற்சிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கோ அல்லது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கோ முயற்சித்து வருகின்றது என்ற கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் எந்த விடயத்திலும் இதுவரை நம்பிக்கை தரக்கூடிய விதத்தில் செயற்படவில்லை.

இந்நிலையில் அரசாங்கம் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையோ அல்லது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கோ கால அவகாசம் கோரவில்லை. மாறாக வடக்கு கிழக்கில் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றார். (அ-2)

# பல்கலைக்கு ஒதுக்கிய நிதியில் 500 மில்லியன் மட்டுமே கிடைத்தது

## உயர் கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவினை மீறிச் செயற்பட்டு வருவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக 4 ஆயிரம் மில்லியன் ரூபாவினை நிதி அமைச்சரான ஜனாதிபதி வழங்குவதற்கு இணங்கியிருந்தார்.

எனினும் நிதி அமைச்சின் செயலாளரான பீ.பி. ஜயசுந்தர வெறும் 500 மில்லியன் ரூபாவினை மட்டுமே இதற்காக ஒதுக்கியுள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக வரவு செலவுத் திட்டத்தில் 4 ஆயிரம் மில்லியன் ரூபாவினை ஜனாதிபதி ஒதுக்கியிருந்தார்.

எனினும் இதில் 500 மில்லியன் ரூபா மட்டுமே வழங்க முடியும் என நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழகங்கள் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் குறைத்து மதிப்பீடு செய்து வருகின்றார்.

பல்கலைக்கழகங்க்ளுக்கு கூடுதலாக பணம் பெற்றுக் கொள்ளப் படமாட்டாது என நிதி அமைச்சின் செயலாளர் கருதுகின்றார். இந்த கருதுகோளை தகர்த்து எறிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஒதுக்கப்பட்ட பணத்தை முழுமையாக பயன்படுத்தவும் புத்தகம், நாற்காலி என எதையேனும் எடுத்து பணத்தை பயன்படுத்தவும் என அமைச்சர் திஸாநாயக்க பல்கலைக்கழக நிர்வாகிகளிடம் கோரியுள்ளார். (அ-2)

# சமாதான சூழலை குழப்ப வெளிநாட்டவர் முயற்சி

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை குழப்புவதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டத்தின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் வடக்கு மற்றும் தெற்கு மக்கள் ஒன்றாக வாழ்கின்றனர். யுத்த காலத்திலும் அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு நாடுகள் அழுத்தங்களை கொடுத்தன.

தற்போதும் நாட்டை குழப்புவதற்கான சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில் அரசாங்கம் என்ற வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்த தியாகத்தையும் மேற்கொள்ள தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)




★1802- ஒல்பேர்ஸ் என்பவர் 2 பேலெஸ் என்ற சிறுகோளைக் கண்டுபிடித்தார்.

★1809-மெடலின் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரான்ஸ் ஸ்பெயினை வென்றது.

★1879-ஆங்கிலோ- சூலு போர் பிரித்தானியப் படைகள் ஹீலோபேன் நகரில் இடம்பெற்ற சமரில் படுதோல்வியடைந்தனர்.

★1930- கொன்ஸ்டன்டீனபில் அங்கோரா ஆகியன இஸ்தான்புல் மற்றும் அங்காரா எனப் பெயர் மாற்றம் பெற்றன.

★1939-ஸ்பானிய உள்நாட்டுப் போரில் பிரான்சிஸ்கோ பிராங்கோ மாட்ரிட் நகரைக் கைப்பற்றினான்.

★1979- ஐக்கிய அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் ஓடும் ஸஸ்குவான ஆற்றின் கரையில் உள்ள மிடில்டன் நகரில் அணுமின் நிலையத்தில் விபத்து எற்பட்டது.

★1988- ஹலப்ஜா நகரின் குர்திய இன மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதில் சுமார் 5 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டது.

★2005- இந்தோனேசியாவின் சுமாத்ராவில் இடம்பெற்ற 8.7 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தினால் ஆயிரத்து 300 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★1862- அரிஸ்டைட் பிறயண்ட் நோபல் பரிசு பெற்றவர் (இ.1932)

★1868- மாக்சிம் கார்க்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ.1936)

★1892- கோர்னெயில் ஹைமான்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ.1968)

★1919- டி.கே.பட்டம்மாள், கர்நாடக இசைப்பாடகி (இ.2009)

★1930- ஜெரோமி பிரீட்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★1982- சோனியா அகர்வால், இந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புக்கள்

★1943- எஸ். சத்தியமூர்த்தி, இந்திய விடுதலை போராட்ட வீரர்

★1982- வில்லியம் ஜியோக், நோபல் பரிசு பெற்ற கனேடியர் (பி.1895)

★2006- வேதாத்திரி மகரிஷி, தத்துவஞானி (பி.1911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவாக்கெடுப்பு நடைபெறும் வரை தேர்தல் புறக்கணிப்பு!

## தமிழின சுதந்திர சுவாசம் அமைப்பு அறிவிப்பு

**இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடைபெறும் வரையிலும் இந்தியாவில் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக மாணவர்கள் கூட்டமைப்பினர் சேலத்தில் அறிவித்தனர். இலங்கையில் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்த இலங்கை அரசைக் கண்டித்தும் தமிழ் ஈழம் அமைய வலியுறுத்தியும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், தமிழின சுதந்திர சுவாசம் என்ற பெயரில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் புதிய அமைப்பைத் தொடங்கியுள்ளனர்.**

சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு, தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் உள்ளிட்ட தொழிற்படிப்பு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களை நிர்வாகிகளாகக் கொண்ட இந்த அமைப்பின் முதல் ஆலோசனைக் கூட்டம் சேலத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து , கூட்டமைப்பின் நிர் வாகிகள் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கைக்கு எதிராக அமெரிக்க அரசு ஐ.நா.மனித உரிமைப் பேரவை கொண்டு வந்த தீர்மானம் வெறும் கண்துடைப்பானது.

எனவே இந்தியர்களையும் உலகெங்கும் வாழும் தமிழர்களையும் ஏமாற்றிய அமெரிக்க அரசை கண்டிக்கும் விதமாக அந்த நாட்டில் தயாரிக்கப்படும் குளிர்பானங்களை இனி வாங்குவதில்லை என்று முடிவு செய்துள்ளோம்.

இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்த இந்தியா உதவிடும் வரையிலும் இந்தியாவில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களையும் புறக்கணிப்போம். இலங்கையில் நடைபெற்றது. இனப்படுகொலைதான் என்பதை உலக மக்களுக்கு உணர்த்த போராடுவோம்.

தமிழ் மக்களைக் கொன்ற இலங்கை அரசு, தொடர்ந்து தமிழக மீனவர்களையும் கொன்று வருகிறது. இதைத் தடுத்து நிறுத்த கச்சதீவை மீட்பது ஒன்றே வழி. எனவே, இந்திய அரசு கச்சதீவை உடனடியாக இலங் கையிடம் இருந்து மீட்க வேண்டும்.

தமிழகத்தில் மாணவர்கள் போராட்டத்தின் போது அநாகரிகமாக நடந்து கொண்ட பொலிஸார் மீது முதல்வர் ஜெயலலிதா உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பதாக மாணவர்கள் தெரிவித்தனர். (அ-2)

# இணுவில் பொதுநூலக 11 ஆவது நிறைவுவிழா

இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தின் புனருத்தாரண பதினோராம் ஆண்டு நிறைவுவிழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில்பொது நூலக கலாசார மண்டபத்தில் இந்நிலைய தலைவர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர்களான சு.சிவதாசன், வை.பிரபாகரன் ஆகியோரும் யா/மானிப்பாய் இந்துக் கல் லூரி ஆசிரியர் எஸ்.ரி.அருட்குமரன் கலந்து கொள்ள வுள்ளனர். அத்துடன் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-2)

# மின்னல் தாக்கி ஒருவர் பலி

மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். அநுராதபுரம்- தம்புத்தேகம பகுதியில் நேற்று முன்தினம் மாலை இவ்விபரீதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. கணவன்- மனைவி மற்றும் பிரிதொருவர் விவசாயம் செய்து கொண்டிருந்த போது இச்சம்பவம் நேர்ந்துள்ளது. மின்னல்தாக்கியதில் மூவரும் பாதிக்கப்பட்டதோடு ஒருவர் தலாவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மனைவி தலாவ வைத்தியசாலையிலும் ஏனைய நபர் அநுராதபுரம் வைத்தியசாலையிலும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். (அ-2)

# வானூர்தி தளத்தை திறந்தால் நற்பெயர் கிடைக்குமா? -ரணில்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது ஏன் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

பியகம தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் தொடர்பாடல் படையணி பிரதிநிதிகளை சந்தித்தபோதே அவர் இவ் விடயத்தை மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார்.

அரசாங்கம் பொதுமக்களுக்கு பின்னால் ஒழிந்து கொண்டு பிரச்சினைகளில் இருந்து தப்பிக்க முனைவதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜெனீவா மாநாட்டிற்கு முன்னர் செயற்பாடுகளை மேற்கொண்டு நாட்டிற்கான சிறந்த பெயரை பெற்றுக் கொள்வோம் என்று வலியுறுத்தியிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

வானூர்தி தளமொன்றை திறப்பதன் மூலம் நாட்டிற்கு நற்பெயர் கிடைத்து விடாது. தம்மால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை அரசாங்கத்தால் ஏன் அமுல்படுத்த முடியாது என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (அ-2)

# புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய நாடுகளை நிரூபிப்போம்!

## அரசாங்கம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் கிடைக்கப் பெற்றதனை ஆதாரத்துடன் நிரூபிப்போம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு 11 நாடுகள் ஆயுதங்களை வழங்கியுள்ளதாகவும் இது தொடர்பான ஆதாரங்கள் சர்வதேச சமூகத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

முள்ளிவாய்க்காலில் மீட்கப்பட்ட இரகசிய ஆவணங்களில் இந்த ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தகவல்கள் காணப்பட்டுள்ளன.

அமெரிக்கப் படையினர் பயன்படுத்தும் எம் 16 ஆயுதங்களையும் சமிக்ஞை கருவிகளையும் புலிகள் பயன்படுத்தியுள்ளனர். புலிகளின் கப்பல்கள் சர்வதேச கப்பல் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

படையினருக்கு கிடையாத சில இலத்திரனியல் சாதனங்களை புலிகள் பயன்படுத்தினர் என குறிப்பிட்டுள்ளது.

புலிகளுக்காக ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்ட குமரன் பத்மநாதனையும் சாட்சியாக ஆஜர் செய்யத்திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-2)

# மகிந்தவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கக்கோரி தற்கொலை மிரட்டல்

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கக்கோரி 50 அடி உயரம் கொண்ட குடிநீர் மேல் நிலை நீர் தேக்க தொட்டி மீது ஏறி தற்கொலை செய்து கொள்வதாக நபர் ஒருவர் மிரட்டியுள்ளார்.

இவர் வாலாஜாபாத் ஒன்றியம் கட்டவாக்கம் கிராமத்தை சேர்ந்த முருகேசனின் மகனான இளங்கோவன் வயது 24 என்ற நபரே இவ்வாறு மிரட்டியுள்ளார்.

இவர் திடீரென்று கட்டவாக்கில் உள்ள 50 அடி உயரம் உள்ள குடிநீர் மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி மீது ஏறி தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டினார். தற்கொலைக்கு காரணமாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்று இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக கூக்குரல் எழுப்பினார்.

இதனை அறிந்த கிராம மக்கள் திரண்டு வந்து சமாதானம் செய்ய முயன்றனர். கிராம மக்களின் சமாதானத்தை ஏற்க மறுத்து குறித்த நபர் மேலிருந்து குதிப்பதாக மிரட்டினார்.

இது குறித்து வாலாஜாபாத் பொலிசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதன் பேரில் வாலாஜாபாத் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இளங்கோவனுடன் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந் நிலையில் பொலிஸார் இளங்கோவனை சமாதானப்படுத்தி அவரது கோரிக்கையை அரசுக்கு தெரிவிப்பதாக கூறி கீழே இறக்கி அனுப்பி வைத்தனர். (அ-2)

# வெலிக்கடை கலவரம்; 100 பக்க அறிக்கை தயார்!

வெலிக்கடை சிறைக்கலவரத்தை ஆராய்ந்த மூன்று அங்கத்தவர் குழுவால் தயாரிக்கப்பட்ட 100 பக்க அறிக்கை இன்னும் சில தினங்களில் வெளியிடப்படவுள்ளது.


கலவரத்துக்கு காரணமாக இருந்தவர் யாராக இருப்பினும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு கூறியுள்ளது.

கலவரத்தின் போது சிறைக்காவலர்களின் நடத்தை,கலவரத்துக்கு இட்டுச் சென்ற சூழல், கைதிகளால் எவ்வாறு வெளியே வர முடிந்தது. ஆயுத களஞ்சிய சாலை எவ்வாறு கலவரக்காரர்கள் வசமானது என்பன பற்றிய விளக்கங்கள் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வெலிக்கடை சிறைக்கலவரம் கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த அறிக்கையின் முழுப் பகுதியும் பொதுமக்களுக்கு வெளியிடப்படாது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கலவரத்தின் போது 27 கைதிகள் இறந்து போயினர். சிறையிலிருந்து தப்பியோடிய கைதிகள் பதினொரு பேர் பின்னர் பிடிபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)





தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜா விளையாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் வெற்றிபெற்ற இல்லத் தலைவர் பரிசு பெறுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலக நாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டில் இலங்கை அரசு

## தனது பிரஜைகளை எச்சரித்தது-பிரிட்டன்

இலங்கையில் மேற்குல நாடுகளுக்கு எதிரான நிலைப்பாடு வலுப்பெற்று வருவதாக பிரித்தானியா தமது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கையிலேயே விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் அண்மைக் காலமாக தேசப்பற்றுசார் நிலைப்பாடுகள் வலுவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேற்குலக நாடுகளுக்கு குறிப்பாக பிரித்தானிய எதிர்ப்பலை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் ஏனைய வெளிநாட்டு இராஜதந்திர அலுவலகங்களுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் பிரித்தானியா வெளியிட்டிருந்த பயண எச்சரிக்கைக்கு இலங்கை எதிர்ப்பை வெளியிட்டிருந்ததுடன் பயண எச்சரிக்கையில் திருத்தங்களை செய்யுமாறும் கோரியிருந்தது.

பிரித்தானியாவின் பயண எச்சரிக்கையானது அந்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை பாதிக்கும் என சுற்றுலாத்துறை சார் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் தொடர்ந்தும் பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாக அண்மைய பயண எச்சரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிப்பட்டாலும் அரசாங்கம் பயங்கரவாத தடுப்பு தொடர்பான நடவடிக்கைகளை கடுமையாகப் பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. இராணுவத்தின் பிரசன்னம் அதிகமாகக் காணப்படுவதுடன் அதிகளவான சோதனைச் சாவடிகள் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்டமிட்ட ஆயுதக் குழுக்களினால் கடத்தல்கள் இடம்பெற்று வருவதாகவும் இதுவரையில் பிரித்தானிய பிரஜைகளுக்கு இவ்வாறான அனர்த்தங்கள் எதுவும் ஏற்பட்டதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரித்தானிய பிரஜைகள் ஆபத்துக்களை எதிர்நோக்கிய சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு என்ற போதிலும் வாகன விபத்துக்கள், கடன் அட்டை மோசடி மற்றும் நீரில் மூழ்குதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# கணனி பயிற்சி

(தும்பளை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சமுர்த்தி வங்கிகளையும் கணனி வேலைத் திட்டத்திற்குள் உள்வாங் கும் பொருட்டு கணனி தொடர்பான பயிற்சி நாளை, நாளை மறுதினம், எதிர்வரும் 31 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்திலும் நாளை மறுதினம் சனிக்கிழமை, எதிர்வரும் 31 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள IIS கணனி பயிற்சி நிலையத்திலும் நடைபெறவுள்ளது. (அ-3-19)

# 1000 ரூபா கொடுப்பனவு ஏப்ரல் மாதம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட முதியோர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு முதியோர்கள் சுற்று நிருபத்தின் படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படும் என சமூக சேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (அ-3-60)

# நாகரிகமான ஆடைகளை ஒழுங்காக அணியுங்கள்

## ஹிருணிகாவிற்கு நீதவான் ஆலோசனை

(கொழும்பு)

நாகரிகமான ஆடைகளை ஒழுங்காக அணிந்து வருமாறு கொல்லப்பட்ட பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகாவிற்கு நீதவான் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான பிரகர்ஷ ரணசிங்க இந்த அறிவுறுத்தலை நேற்றைய தினம் வழங்கியுள்ளார். பொரளையிலுள்ள வர்த்தக நிறுவன உரிமையாளரொருவரை மிரட்டி தாக்கினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஹிருணிகா ஆஜராகினார்.

இதன்போதே மேலதிக நீதவான் இந்த ஆலோசனையை வழங்கினார். இளஞ் சிவப்பு நிற குர்தா மற்றும் காற்சட்டை அணிந்து நேற்றைய வழக்கு விசாரணைக்காக அவர் ஆஜராகியிருந்ததாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை குறித்த வர்த்தகரை பயமுறுத்தி தாக்கியதாக கூறப்படும் ஹிருணிகா மற்றும் நால்வர் மீதான வழக்கு நீதவானினால் இணக்கப்பாட்டுக்கு அனுப்பப்பட்டது.

முறைப்பாட்டாளர் இந்த பிரச்சினையை இணக்க முறையில் தீர்க்க முடியும் என கூறியதாக பிரதிவாதிகளின் வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் மறுத்தார். ஆயினும் சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டு முறைப்பாட்டாளரான தம்மிக்க செனவிரத்னவிடமிருந்து மன்னிப்பு கேட்டால் மாத்திரமே இணக்க வழி தீர்வை பற்றி கவனத்தில் எடுக்க முடியும் என நீதவான் கூறினார்.

அத்துடன் சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் அவர்கள் இணக்க சபைக்கு போக வேண்டும் எனவும் எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி இணக்க சபையின் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (அ-2)

# கமநல சேவைகள் நிலையம் பொலிஸாரால் மீள் கையளிப்பு

கிளிநொச்சி, முழங்காவில் பிரதேசத்தின் கமநல சேவைகள் நிலையக் கட்டடம் பொலிஸாரினால் கமநல சேவைகள் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

போரின் பின்னர் பொலிஸாரின் பயன்பாட்டிலிருந்த இந்தச் சேவை நிலையத்தை மீளவும் கமநல சேவைகள் திணைக்களத்தின் பயன்பாட்டுக்கு ஒப்படைக்குமாறு நீண்ட காலமாக முழங்காவில் பிரதேசத்தின் விவசாய அமைப்புக்களும் கமநல சேவைகள் நிலையத்தினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

எனினும் மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரை தங்களால் இந்த நிலையத்தை உடனடியாக விட்டுச் செல்ல முடியாதென்று பொலிஸ் தரப்பு சொல்லி வந்தது.

இந்த நிலையில் தற்போது பொலிஸ் பிரிவுக்கு தனியாக மாற்று இடம் வழங்கப்பட்டதை அடுத்து இந்நிலையம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# யாப்பு திருத்தத்திற்கான பரிந்துரைகள் தயார்

## சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் சாசனம் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பிலான பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் அழைப்பாளர் மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அமுலில் உள்ள 1978 ஆம் ஆண்டு அரசியல் சாசனத்திற்கு பதிலாக புதிய அரசியல் சாசனமொன்று உருவாக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக உத்தேச வரைவுத் திட்டமொன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற முறைமை நாட்டில் மீளவும் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது.

மக்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கக்கூடிய பாராளுமன்ற முறைமையொன்றின் அவசியம் விஞ்சியிருக்கின்றது.

அரசியல் சாசன சட்டத்தரணியும் அரசியல் சாசன ஆலோசகருமான ஜயம்பத்தி விக்ரமரட்னவின் தலைமையிலான குழுவினர் இந்த உத்தேச அரசியல் சாசனத்தை தயாரித்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜே.வி.பி தலைவர்கள், லங்கா சம சமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் தற்போதைய அரசியல் சாசனத்தில் மாற்றம் ஏற்படுத்துவதாகத் தெரிவித்து தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளதாக தேரர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஐ.தே.க.கிளர்ச்சிக்குழு தனித்துப் போட்டியிடும்

ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக்குழு எதிர்வரும் சகல தேர்தல்களிலும் தனித்து போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியொன்றின் சின்னத்தின்கீழ் கட்சியின் கிளர்ச்சிக் குழுவினர் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவுகள் துண்டிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார். அதிகாரமற்ற ஓர் அரசியல் கட்சியில் தொடர்ந்தும் அங்கம் வகிக்க விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலுவான ஓர் தலைவரை கட்சிக்கு நியமித்து மீளவும் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் வாக்காளர் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தமிழர்கள் பிரச்சினை தமிழகத்தின் வாக்குகளை நிர்ணயிக்காது

## துக்லக் பத்திரிகையின் ஆசிரியர் சோ

இலங்கை தமிழர்களின் விடயத்தில் இந்தியா தற்போது நெருக்கடிக்கு உட்பட்டிருப்பதாக துக்லக் பத்திரிகையின் ஆசிரியர் சோ. ராமசாமி தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தின் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

எனினும் ஒரு கல்லூரியில் 3 ஆயிரம் மாணவர்கள் இருந்தால் அவர்களில் 150 பேர் மாத்திரமே பங்கேற்றனர்.

இதனை முழு சமூகமும் இணைந்து நடத்தும் ஆர்ப்பாட்டமாக கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் தமிழர்களின் பிரச்சினை தமிழகத்தில் வாக்குகளை நிர்ணயிக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தமிழக நடிகர்களின் போராட்டத்துக்கு இலங்கை சிங்கள நடிகர்கள் கண்டிப்பு

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக தமிழக நடிகர்கள் ஆர்ப்பாட்டத்திலும் உண்ணாவிரத போராட்டத்திலும் ஈடுபடுகின்றமையை இலங்கையில் உள்ள நடிகர்கள் கண்டித்துள்ளனர்.

பிரபல சிங்கள திரைப்பட நடிகர் ரவீந்திர ரந்தெனியா குறித்த விடயத்தை கண்டித்துள்ளார்.

தமிழகத்தில் அரசியல்வாதிகள் தங்களின் சுயநலத்துக்காக ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர்.

இதற்கு ஆதரவாக நடிகர்களும் கலந்து கொள்ளவிருப்பது வருத்தமளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த மாதம் தமிழ் நடிகர்கள் கலந்து கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தில் ரஜினி காந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்கள் தாக்குதலில் பிரிட்டிஷ் வீரர் ஒருவர் பலி

## 9 பேர் காயம்

ஆப்கானிஸ்தானின் ஹெல்மாண்டு பகுதியில் பணியிலிருந்த ரோந்துப் படையினரின் மீது நேற்று முன்தினம் இரவு தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வெடிகுண்டுகள் அடங்கிய லொறியுடனும் ஆயுதங்களுடனும் வந்த தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பிரிட்டிஷ் வீரர் ஒருவர் பலியானதோடு 9 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஆப்கானிஸ்தான் படையினரும் அடங்குவர்.

இதேவேளை, மீண்டும் ஜலாலாபாதின் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு பொலிஸ் நிலையத்தை 8 பேர் அடங்கிய தற்கொலைப் படையினர் தாக்கியதில் 5 அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவின் இராணுவப் படையினை அந்நாட்டு ஆப்கானிஸ்தானில் இருந்து அடுத்த வருடம் அழைத்துக் கொள்ள இருக்கின்றது. அமெரிக்க நாட்டின் வெளிவிவகார செயலாளர் ஜோன் கெர்ரி ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி ஹமித் கர்சாயை சந்தித்து இரு நாடுகளின் உறவுகள் குறித்து பேசுவதற்காக வந்திருக்கும் இச் சமயத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

இந்த இருதாக்குதல்களும் தனியே செயற்படவிருக்கும் ஆப்கானிஸ்தானின் பொலிஸாருக்கு பெரும் சவாலாக விளங்கக்கூடும். (அ-2)

# கச்சா எண்ணெய் பைப் குண்டு வைத்து தகர்ப்பு

துருக்கி நாட்டிற்கு கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் முக்கிய பைப் லைனை தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்துள்ளனர்.

ஈராக்கில் இருந்து துருக்கி வழியாக பல்வேறு நாடுகளுக்கு பைப் லைன் மூலம் பெற்றோலிய கச்சா எண்ணெய் கொண்டு செல்லப்படுகிறது.

அங்கிருந்து மெடிட்டேரனியன் கடலில் உள்ள துறைமுகம் வழியாக இந்த கச்சா எண்ணெய் கப்பல்கள் மூலம் உலக நாடுகளில் உள்ள பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையங்களை சென்றடைகின்றன.

பெற்றோலிய கச்சா எண்ணெய் உற்பத்தியில் முதலிடத்தை வகிக்கும் ஈராக்கின் பொருளாதாரம் பெரும்பாலும் கச்சா எண்ணெய் ஏற்றுமதியையே சார்ந்துள்ளது.

இந்நிலையில் துருக்கி நாட்டிற்கு கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் முக்கிய பைப் லைனை தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்தனர்.

இதனால் துருக்கிக்கு செல்லும் கச்சா எண்ணெய் விநியோகத்தில் தடை ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த குழாய் செல்லும் பாதை நெடுகிலும் தீப்பிடித்து எரிவதால் எண்ணெய் சப்ளையை பாஜி சுத்திகரிப்பு நிலையம் முற்றிலுமாக நிறுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடும் விலை உயரும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. (அ-2)



ஜேர்மனியின் லாங்பெல்டு நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறுவனுடன் சான்சிலர் ஏஞ்சலா மெர்கல் விளையாடி மகிழ்ந்தார்.

# சோமாலிய இடம்பெயர்மக்களுக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

சோமாலியாவில் உள்ள இடம் பெயர்விற்கு உள்ளான மக்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கப் படையினரும் ஏனைய ஆயுதக் குழுக்களும் இடம்பெயர் மக்களை இவ்வாறு துன்புறுத்தி வருவதாக மனித உரிமைக் கண்காணிப்பகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தலைநகரில் அடைக்கலம் கோரி வரும் பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனித உரிமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புதியஅரசாங்கம் அறிக்கை விட்ட போதிலும், உண்மையில் மிகச் சொற்பளவிலான மாற்றங்களே மெய்யாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடைக்கலம் கோரும் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களினால் சுதந்திரமாக நடமாட முடிவதில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# பாக்.கை விட்டு சர்தாரியின் மகன் பிலாவல் வெளியேற்றம்

தந்தையுடன் ஏற்பட்ட மன வேற்றுமை காரணமாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியின் மகன் பிலாவல் பூட்டோ சர்தாரி பாகிஸ்தானை விட்டு வெளியேறியுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி பாகிஸ்தான் பொது தேர்தல் நடைபெற உள்ள நிலையில் மக்கள் கட்சியின் நட்சத்திர பிரசாரகர் என கருதப்படும் பிலாவல் பாகிஸ்தானை விட்டு வெளியேறி டுபாய் சென்றுவிட்டதாக செய்திகள் கசிந்துள்ளன.

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட தனது ஆதரவாளர்களுக்கு வாய்ப்பு வழங்காதது, பாகிஸ்தானில் பாடசாலை மாணவி தாக்கப்பட்ட விவகாரம், குவெட்டா நகரில் ஷியா பிரிவினர் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதல் ஆகியவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்காதது உள்ளிட்ட சில மனவேறுபாடு காரணமாக அவர் தந்தையுடன் தகராறு செய்து கொண்டு டுபாய் சென்று விட்டதாக பிலாவலுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தேர்தலில் வாக்களிக்க நேர்ந்தாலும் இனி பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு வாக்களிக்க மாட்டேன் என பிலாவல் கூறியதாகவும் தெரிய வருகிறது. (அ-2)

# பழம் பெரும் நடிகை சுகுமாரி காலமானார்

(சென்னை)

பழம்பெரும் நடிகை சுகுமாரி (வயது-74) நேற்று முன்தினம் காலமானார். இவர் 1940 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம், 16 ஆம் திகதி பிறந்தார்.தனது 10 ஆவது வயதில் நடிப்புலகில் கால் பதித்தார். நடிகை சுகுமாரியின் முதல் படம், பட்டிக்காடா பட்டணமா ஆகும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலையாளம், தமிழ், கன்னடம், தெலுங்கு, இந்தி படங்களில் நடித்துள்ளார்.



சில நாட்களுக்கு முன் அவர் வீட்டில் விளக்கு ஏற்றும்போது உடலில் பலத்த தீ காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், 35 சதவீத தீக்காயம் ஏற்பட்டதாகத் தெரிவித்தனர். இதையடுத்து தீவிர சிகிச்சை பிரிவில் சுகுமாரிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு நடிகை சுகுமாரி, சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

திரையுலகைச் சேர்ந்த நடிகர் நடிகைகள் இறுதி அஞ்சலி செலுத்தினர். இவரது இறுதி சடங்கு நேற்று மாலை நடைபெற்றது. (அ-2)

# குமுறுகிறது லோக்கோன் எரிமலை

இந்தோனேசியாவின் டொமோஹோன் நகரிலுள்ள லோக்கோன் எரிமலை குமுறத் தொடங்கியதை அடுத்து அவ்விடத்தினை சுற்றியுள்ள மக்களை வெளியேறுமாறு அந்நாட்டின் தேசிய மற்றும் உள்ளூர் பேரிடர் மேலாண்மை எச்சரித்துள்ளது.

பயங்கர சத்தத்துடன் வெடித்த எரிமலையானது சுமார் 2 ஆயிரம் மீற்றர் உயரத்திற்கு தீ பிழம்பை வெளியேற்றியது.

எரிமலையின் நிலையை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அருகிலுள்ள கிராமங்களின் பாதுகாப்பு பற்றி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிமலை சீற்றத்தால் சுற்றியுள்ள மூன்று கிராமங்களில் அதன் சாம்பல் படிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 17 வயதில் கோடீஸ்வரன்

லண்டனை சேர்ந்த நிக்டி அலோஸ்சிகா என்ற 17 வயது சிறுவன் கையடக்க தொலைபேசியில் செய்தி வாசிக்கும் முறையை (மொபைல் நியூஸ் ரீடர் ஆப்சன் சம்லி) கண்டுபிடித்திருக்கிறான்.

அதை யாகூ செய்தி நிறுவனம் அவனிடமிருந்து வாங்கவுள்ளது. இதற்காக சிறுவனுக்கு 165 கோடி ரூபா முதல் 330 கோடி ரூபா வரை வழங்க தயாராகவுள்ளது. மேலும் யாகூ நிறுவனத்திலும் அவனுக்கு வேலையும் வழங்கப்படுகிறது.

இதன்மூலம் மிக இளம் வயதில் தனது முயற்சியால் கோடீஸ்வரராகும் பட்டியலில் இடம்பிடித்து இருக்கிறான். (அ-2)

# மத்திய ஆபிரிக்க குடியரசில் 6 இலட்சம் சிறுவர்கள் பாதிப்பு

மத்திய ஆபிரிக்க குடியரசில் நிலவி வரும் கிளர்ச்சியின் காரணமாக 6 இலட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக யுனிசெப்பின் பேச்சாளர் மரிக்ஸியே மெர்க்கடோ தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் ஐ.நாவின் சிறுவர் நலனுக்கான பிரிவான யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மத்திய ஆபிரிக்க குடியரசில் நிகழும் குழப்பநிலை காரணமாக 6 இலட்சம் சிறுவர், சிறுமிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக அங்கு கிளர்ச்சிப் படையினர் தம் வசம் வைத்திருக்கும் பகுதிகளில் மக்கள் சமூகம் அடிப்படை வசதிகள் கூட கிடைக்காது அல்லாடுகின்றனர்.

இதில் சுகாதார சேவையும் கல்வியும் அடங்கும். மேலும் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாததனாலும் ஆயுத குழுக்களால் பாடசாலைகள் கைப்பற்றப்பட்டிருப்பதாலும் ஒரு இலட்சத்து 66 ஆயிரம் சிறுவர்கள் கல்வி கற்கும் உரிமையை இழந்துள்ளனர்.

மேலும் 13 ஆயிரத்து 500 சிறுவர்கள் வரை போசாக்குக் குறைபாட்டால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழக்கும் தறுவாயிற்கு தள்ளப்படலாம்.

இவற்றை விடப் பாரதூரமான ஒன்று கிளர்ச்சிப்படையினர் தமது அமைப்புக்கு சிறுவர்களை அதிகளவு ஆள் சேர்த்து வருகின்றமையாகும் என்றும் மெர்க்கடோ கூறினார்.

மேலும் அங்கு மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது போதிய பண உதவி இல்லாமையால் தாமதமாகி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அங்கு மனிதாபிமான உதவியளிக்கும் நிறுவனங்கள் அங்கு உடனடி மீட்பு நடவடிக்கைக்காக 129 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கோரியுள்ளன. (அ-2)

## மாவீரன் நெப்போலியன்

# மனைவியின் மோதிரம் 5 1/2 கோடிக்கு ஏலம்





மாவீரன் நெப்போலியன் தனது [illegible] மனைவி ஜோசபினுக்கு அணிவித்த வைர மோதிரம் 5 1/2 கோடி ரூபாவிற்கு ஏலம் போயுள்ளது.

18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அந்த மோதிரம் பிளவுபட்ட நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மோதிரத்தில் பதிக்கப்பட்டுள்ள நீலநிற கற்களும் வைரக் கற்களும் ஒரு கரட் எடைக்கு அதிகமானதாகும்.

இந்த அரிய வகை மோதிரம், பிரான்சில் உள்ள ஓசெனாட் மையத்தில் 5 1/2 கோடிக்கு 550 இலட்சம் ரூபா ஏலம் போயுள்ளது.

ஏற்கனவே இதை வோஷிங்டனில் ஏலம்விட ஏற்பாடு செய்யப்பட்ட போதும் பிரான்சில் நிர்ணயிக்கப்பட்டதை விட 50 மடங்கு அதிகமாக ஏலம் போயுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனை அதிகமாக இருந்தால் சுகம் பெரிய அளவில் வரப்போகிறது என்று அர்த்தம்.
– கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாணவர் போராட்டத்தை கைவிட தமிழக முதல்வர் வேண்டுகோள்



தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ மாணவியர் தங்களுடைய அறப் போராட்டத்தைக் கைவிட்டு, கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, பெற்றோருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்த தீர்மானத்தில் கூறியிருப்பதாவது,

இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற, ஈவு இரக்கமற்ற, மனிதநேயமற்ற செயல்களை, போர்க் குற்றங்களை, இனப் படுகொலையைக் கண்டித்து, கல்லூரி மாணவ, மாணவியர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மாநிலம் முழுவதும் சுமார் 100 க்கும் அதிகமான கல்லூரிகளில் மாணவ, மாணவியர் வகுப்புக்களை புறக்கணித்து நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர் பல்வேறு இடங்களில் உண்ணா விரதப் போராட்டம் மேற்கொண்டனர்.

மேலும், மாணவ மாணவியர் 210 இடங்களில் ஆர்ப்பாட்டம், 110 இடங்களில் ஊர்வலம், 68 இடங்களில் சாலை மறியல், 31 இடங்களில் ரயில் மறியல் , 24 இடங்களில் உருவப்பொம்மை எரித்தல் ஆகிய போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இலங்கைத் தமிழர்களின் பால் எனது தலைமையிலான தமிழக அரசு எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டும் , நமது கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் நாள் விரைவில் மலர இருக்கிறது என்பதை மனதில் வைத்தும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ- மாணவியர் தங்களுடைய அறப் போராட்டத்தை கைவிட்டு, கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்தி ,பெற்றோருக்கும், தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு முதலமைச்சர் ஜெயலிதா கூறினார். (எ-11)

## கொதித்தெழும் தமிழகத்தை தணித்தெடுப்பது எங்ஙனம்?

இஞ்சியைக் கொடுத்து மிளகாயை வேண்டுதல் என்பது இரண்டாம் இராஜசிங்கனுக்கு மட்டுமல்ல; அது இந்தியாவுக்கும் பொருந்துவதாக உள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில் உள்ளொன்றும் புறமொன்றுமாக நடந்து கொண்ட இந்தியா, இலங்கைக்கு வரக்கூடிய உபாதையைத் தவிர்க்க உதவி செய்து உபத்திரத்தை தான் சுமந்து கொண்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை எடிட்டிங் செய்யப்போய் இப்போது தமிழ்நாடு, மத்திய அரசுக்கு எதிராக கொந்தளிக்கின்றது.

கொந்தளிப்பு எத்தனை நாட்களுக்கென்று யாரும் கேட்டுவிடலாகாது.

கிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்குதல் என்றொரு பழமொழி நம்மத்தியில் உண்டு. கிரந்தம் கருக்கட்டி விட்டால் இந்தக் கருவால் எதுவும் ஆகாதென்று நினைத்துவிடலாகாது அல்லவா? அதுபோலத்தான் தமிழகத்தில் எழுந்துள்ள கொந்தளிப்பும்.

பாலச்சந்திரனின் படுகொலை குறித்த சனல் 4 இன் காணொளிகள், ஜெனிவாத் தீர்மானம் என்பவற்றுடன் தமிழகத்தில் எழுகை பெற்றுள்ள ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் மாணவர்கள் என்ற மாபெரும் சக்தியில் பற்றிக் கொள்ள,

இப்போது தமிழகம் முழுவதும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவும் இந்திய மத்திய அரசுக்கு எதிர்ப்பும் காட்டாறாக ஓடுகிறது.

இஃது இந்திய தேசத்தின் வந்தே மாதரம் என்ற ஒற்றுமைக்கு பங்கம் என்பது உணரப்பட வேண்டும்.

எங்கள் உடன்பிறப்புக்களான ஈழத்தமிழர்களுக்குத் துரோகம் இழைக்கும் இந்திய மத்திய அரசு தமிழகத்தை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

மாறாக சீனாவுடன் கைகோர்த்து நிற்கும் இலங்கை அரசைக் காப்பாற்றுவதிலேயே மத்திய அரசின் முழுக்கவனமும் உண்டென்ற உண்மை தமிழகத்து மாணவர்களால் உணரப்பட்டுவிட்டது.

எதிலும் நேர்மைத்தனத்தை விரும்புகின்ற இளம் சமூகமானது கிளர்ந்தெழுமாக இருந்தால், அதன் விளைவு அமைதியற்ற களநிலையும், ஆட்சிக் கவிழ்ப்பும், பிரிந்து போக வேண்டும் என்ற உறுதிப்பாடுமாகவே இருக்கும்.

ஆக, இத்தகையதொரு சூழ்நிலையை இந்திய மத்திய அரசு தமிழகத்தில் ஏற்படுத்திவிட்டது.

இலங்கையில் ஒற்றையாட்சிக்கு உதவிய இந்தியா, தனது நாட்டின் ஒற்றையாட்சிக்கு உலைவைத்த கதை நல்லதொரு அனுபவப் பாடமாகும்.

## சென்னையில் நேற்று 6 இடங்களில் போராட்டம்

### கொடும்பாவிகளும் எரிப்பு

(சென்னை)

இலங்கைக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து கொண்டே வரும் நிலையில், நேற்றுச் சென்னையில் மட்டும் 6 இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன.

சென்னை கடற்கரைச்சாலை அகில இந்திய வானொலி நிலையம் முன்பு தமிழீழ போராட்டக் குழுவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அப்போது இலங்கை ஜனாதிபதியின் படங்களை எரித்தார்கள்.

சென்னை அண்ணாநகர் 3 அவன்யூவில் உள்ள தொலைத் தொடர்புத் துறை அலுவலகம் எதிரே வள்ளியம்மை கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

ஜெ.ஜெ.நகர் பாடி தபால் நிலையம் எதிரே மகளிர் சுய உதவிக் குழுவினர் ஆர்ப்பாட்டம் நடத்தி பொம்மையை எரித்தார்கள்.

மேலும், வடக்கு கடற்கரைச்சாலை ஆட்சியர் அலுவலகம் எதிரே திராவிட மக்கள் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 40 பேர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

புதுவண்ணாரப்பேட்டை காலார மருத்துவமனை அருகே விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ராஜபக்ஷ வின் கொடும்பாவியையும் சோனியாவின் கொடும்பாவியையும் எரித்தார்கள்.

பல்லாவர்ம சுற்றுச்சாலையில் வேல்டெக் கல்லூரி மாணவர்கள் 375 பேர் சாலை மறியல் செய்தனர். (எ-11)

## விருது வழங்கும் விழா

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச இசைக் குழு ஏற்பாடு செய்கின்ற அரச இசை விருது வழங்கும் விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட போட்டியாளர்கள் இப்போட்டி தொடர்பான விபரங்களை தெரிந்து கொள்ள விரும்பின் பிரதேச செயலக கலாசார பிரிவில் கேட்டு அறிந்து கொள்ள முடியும்

போட்டியில் பங்குபற்ற விரும்புவோரின் ஆக்கங்கள் எதிர்வரும் 31-ம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8-ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (எ-2)

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

(வட்டக்கச்சி)

வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிப ஆசிரியர் ஒருவரின் தங்கச் சங்கிலியை முகவரி கேட்பதாக பாணி செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் வட்டக்கச்சி சில்வா வீதி, ஐயனார் கோயிலுக்கு முன்பாக இடம் பெற்றது.

இதில் அதே இடத்தை சேர்ந்த திருமதி த. செந்தமிழ்செல்வி (வயது 60) என்ற ஓய்வுபெற்ற ஆசிரியரின் ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலியே அபகரிக்கப்பட்டதாகும்.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-26)

## 10 இலங்கை மீனவர்கள் இன்று நாடு திரும்புவர்

இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்யப்பட்ட 10 மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை மீன்பிடித்துறை அமைச்சு இந்திய அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் இன்று வியாழக்கிழமை நாடு திரும்பவுள்ளனர். (எ-11)

## 15 வயதிற்குட்பட்டோர் மரதன் ஓடுவதற்குத் தடை

மரதன் ஓட்டப் போட்டிகளில் 15 வயதுக்குட்பட்டவர்கள் பங்குபற்ற முடியாதென விளையாட்டு மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.


அண்மைக்காலத்தில் மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் சிலர் உயிரிழந்ததையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (எ-11)

## சத்திய தரிசனம்



மதக்கோட்பாடுகளுடன் பிறப்பது நல்லதுதான். ஆனால் அவற்றுக்குள்ளேயே இறப்பது நல்லதல்ல. கோட்பாடுகள், சடங்குகள், குறுகிய ஆசாரங்கள் இவற்றிலிருந்து வளரப்பழகிக் கொள்ளுங்கள். சுதந்திரமாகச் சிந்திக்கப் பழகிக்கொள்ளுங்கள். கோட்பாடுகளின் அவசியம் இல்லாத ஓர் உன்னத நிலையை நீங்கள் அடையவேண்டும். அங்கிருந்துதான் எல்லாப் பாதைகளும் பிறக்கின்றன. அங்கேதான் முடிகின்றன. மற்றவருடைய குற்றத்தை மன்னியுங்கள். உங்கள் குற்றங்களை கடுமையுடன் அணுகுங்கள்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### மணி ஓசையின் தனித்தன்மை என்ன?

பூஜைநேரங்களிலும் கோயில்களிலும் மட்டும் பயன்படுத்தியிருந்த மணி இப்போது வீடுகளில் அழைப்பு மணியாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

பூஜைக்குப் பயன்படும் ஒரு பொருளாகவே மணியைப் பற்றி நாம் கருதி வந்தோம். ஆனால் மணியோசையை யாரும் ஆராய்ந்தறிய முன்வருவதில்லை.

கிராமப்புறத்து செம்மண் வீதிகளில் ஊர்ந்து நகரும் மாட்டு வண்டிகளில் மாடுகளின் கழுத்திலிருந்து எழும்பும் மணியோசையைக் பற்றி நம் கவிஞர்கள் அழகாக வர்ணித்துள்ளனர்.

மணியோசை ஓர் ஓம்காரநாதம் என்பதே அதை ஆராய்ந்தவர் கண்டறிந்தது. அலைபோல் உயர்ந்து படிப்படியாகத் தாழ்ந்து ஒரு குறிப்பிட்ட அளவில் உயரும் ஓம் என்ற பிரணவ மந்திரத்துக்கு மனதை உணர்வூட்ட இயலும் என்று அவர்கள் கருத்து. பக்தர்களை பரசவத்திற்கு கொண்டு செல்லும் இயல்பு இவ்வோசைக்கு உண்டு என்பதை நாம் கண்டறிந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சென்னை எனக்கு 2 ஆவது தாய்நாடு’

**– சொல்பவர் முரளிதரன்**


சென்னை எனக்கு இரண்டாவது தாய்நாடு. காரணம் எனது மனைவி மதிமலர் இங்குதான் உள்ளார். இது எனக்கொரு உணர்வுபூர்வமான நிலை. நாங்கள் அரசிய லுக்குள் நுழைய விரும்பவில்லை. கிரிக்கெட் விளையாடி எங்கள் ரசிகர்களை மகிழ்விக்கவே விரும்புகிறோம் எனத் தெரிவித்துள்ளார் இலங்கையின் முன்னாள் சுழல் நாயகன் முரளி.

ஐபில் போட்டியில் இலங்கை வீரர்கள் பிரச்சினை தொடர்பில் இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த முரளிதரன் மேலும் கூறியதாவது,

இது கிரிக்கெட்டுக்கு ஒரு கவலைக்குரிய நாள். இந்தியாவின் சில பகுதிகளில் விளையாட நாங்கள் அனுமதிக்கப்படவில்லை. இது ஒரு அரசாங்க தீர்மானம். அவர்கள் எமக்கு பாதுகாப்பு அளிக்கவில்லை என்றால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நான் ரோயல் சலன்ஜேர்ஸ் அணிக்காக விளையாடுகிறேன். அவர்களுக்கு ஒரு பிரச்சினையும் கிடையாது. சென்னை தவிர்ந்த ஏனைய போட்டிகளில் என்னால் விளையாட முடியும்.

முன்னர் இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் யுத்தம் காணப்பட்டது. ஆனால் இன்று எனது நாட்டில் மக்கள் அமைதியாக வாழ்கின்றனர். எனவே ஆட்சேபனை தெரிவிக்கும் இந்திய தரப்பினர் இலங்கைக்கு கட்டாயம் வந்து முன்னர் நடந்தவற்றை மறந்து அங்குள்ள மக்கள் எப்படி வாழ்கின்றனர் என பார்க்க வேண்டும். இப்போதுள்ள நிலைபோன்று மீண்டுமொரு யுத்தத்தை நாங்கள் விரும்பவில்லை.



எங்களை விளையாட அனுமதித்தால் நாம் நிச்சயம் சென்னையில் விளையாடுவோம். சென்னை எனக்கு இரண்டாவது தாய்நாடு. காரணம் எனது மனைவி மதிமலர் இங்குதான் உள்ளார். இது எனக்கொரு உணர்வுபூர்வமான நிலை. நாங்கள் அரசியலுக்குள் நுழைய விரும்பவில்லை. கிரிக்கெட் விளையாடி எங்கள் ரசிகர்களை மகிழ்விக்கவே விரும்புகிறோம்."

இவ்வாறு இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் தற்போதைய ஐபிஎல் ரோயல் சலன்ஜேர்ஸ் அணி வீரருமான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

# சுயவிருப்பில் வீரர்களை ஐ.பி.எல்லுக்கு அனுப்ப இலங்கை தீர்மானம்

சுயவிருப்பம் குறிப்பிடப்பட்ட கடிதங்களைப் பெற்று இலங்கை கிரிக்கெட் வீரர்களை IPL போட்டிகளுக்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வீரர்களை IPL போட்டிகளில் களமிறக்குவது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடனான கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். சென்னையில் நடைபெறவுள்ள போட்டிகளில் இலங்கை கிரிக்கெட் வீரர்களைக் களமிறககாதிருக்கவும் நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

எவ்வாறாயினும், ஏனைய மாநிலங்களில் நடைபெறவுள்ள போட்டிகளில் விளையாடுவதற்கு இலங்கை வீரர்களை அனுப்பிவைக்குமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய, இலங்கை வீரர்களின் பாதுகாப்பிற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உத்தரவாதமளிக்க வேண்டும் எனவும், உத்தரவாதம் கிடைத்தவுடன் வீரர்களின் விருப்பம் குறிப்பிடப்பட்ட கடிதங்களைப் பெற்று அவர்களை இந்தியாவிற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மீண்டும் முதலிடத்தைப் பிடிப்போம்

**- அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர்**

அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் இந்தியச் சுற்றுப் பயணம் குறித்து கூறுகையில்,

இந்தியாவில் தற்போது மேற்கொண்ட சுற்றுப்பயணம் என் வாழ்நாளில் மிகவும் கடினமானது. இந்தியாவில் விளையாடுவதும் வெற்றி பெறுவதும் மிகவும் கடினம். அவுஸ்திரேலிய அணி நல்ல நிலையில் உள்ளது. அணியில் இப்போது சிறந்த இளம் வீரர்களை சேர்த்திருக்கிறோம். அணி தற்போது சரியான பாதையில் முன்னேறி வருகிறது. இது அணியின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளமாகும். இப்போது உலகத் தரவரிசையில் 4ஆம் இடத்தில் இருக்கிறோம்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மீண்டும் முதலிடத்தைப் பிடிப்போம் என்றார்.

# உலகக் கிண்ண காற்பந்து தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் வெற்றி

பிரான்ஸ் அணிக்கு எதிரான உலக கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டியில் ஸ்பெயின் அணி வெற்றி பெற்றது.


பிரேசிலில், எதிர்வரும் 2014ஆம் ஆண்டு ‘பிபா’ உலக கிண்ணக் காற்பந்து தொடர் நடைபெறவுள்ளது. ஐரோப்பா கண்டத்தில் நடந்த, இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டியில், ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் மோதின. முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியில் சுதாரித்துக் கொண்ட, ஸ்பெயின் அணியின் பெட்ரோ 58ஆவது நிமிடத்தில், ஒரு கோல் அடித்தார். இதற்கு எதிரணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், ஸ்பெயின் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு போட்டியில் நெதர்லாந்து அணி 4-0 என்ற கோல் கணக்கில் ருமேனியாவை வீழ்த்தியது. செர்பியா, ஸ்கொட்லாந்து அணியை 2-0 என வென்றது. ஜேர்மனி அணி 4-1 என கஜகஸ்தான் அணியை தோற் கடித்தது.

‘பி’பிரிவில் ஜோர்தான், ஜப்பான் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதே பிரிவில் அவுஸ்திரேலியா, ஓமன் அணிகள் மோதிய போட்டி 2-2 என ”டிரா“ ஆனது. ”ஏ“ பிரிவில் நடந்த போட்டியில், தென் கொரியா, கட்டார் அணியை 2-1 என வென்றது.

# தோனிக்குப் பிரியமான...

- ✔ அமெரிக்காவிலுள்ள கான்ஃபடரேட மோட்டோர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்புதான் எக்ஸ்132 ஹெல்கேட் சூப்பர் பைக்.
- ✔ விமான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் இலகு எடையும், அதிக உறுதியும் கொண்ட அலுமினியத்தில்தான் இதன் எஞ்சின் கேஸிங் தயாரிக்கப்படுகிறது.
- ✔ இந்த பைக்கில் 2,163சிசி திறன் கொண்ட எஞ்சின் பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த எஞ்சின் 132 பிஎச்பி ஆற்றலை வெளிப்படுத்தும். 5 ஸ்பீட் கியர் பொக்ஸ் பொருத்தப்பட்டிருக்கிறது.
- ✔ மணிக்கு 320 கிமீ வேகத்தில் செல்லும் ஆற்றல் வாய்ந்த சுஸூகி ஹயபுசாவை விட இது அதிக வேகத்தில் செல்லும் திறன் வாய்ந்தது
- ✔ 215 கிலோ எடை கொண்டது ஹெல்கேட். இந்த பைக்கின் சக்கரங்கள் அதிக உறுதி கொண்ட கார்பன் ஃபைபரால் தயாரிக்கப்பட்டுள்ளது. இரண்டு வீல்களிலும் டிஸ்க் பிரேக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.




கிரிக்கெட்டை எந்தளவு நேசிக்கிறாரோ அந்த அளவுக்கு பைக்குகள் மீது அலாதி பிரியம் வைத்திருக்கிறார் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் தோனி. கவாஸாகி, ஹார்லி டேவிட்சன் ஃபேட் பாய் என அனைத்து பிரபல நிறுவனங்களின் சுப்பர் பைக்குகளும் தோனியிடம் உள்ளது.

அவுஸ்திரேலியாவை வீழ்த்திய சந்தோஷத்தோடு, டில்லி கிரேட்டர் நொய்டா பகுதியில் அமைந்துள்ள புத்தா சர்வதேச கார் பந்தய களத்துக்கு விஜயம்செய்தது இந்தியக் கிரிக்கெட் அணி. இங்கு தோனி தனது எக்ஸ்132 ஹெல்கேட் மோட்டர் பைக்கில் 5.14 கி.மீ. தொலைவு கொண்ட பந்தயக் களத்தில் மிகவேகமாகப் பறந்து பார்வையாளர்களை பரவசப்படுத்தினார்.

நொய்டா பார்முலா 1 பந்தயக்களத்துக்கு முதல் முறையாக வந்த டோனி கூறுகையில், ‘இது மிகவும் அற்புதமான அனுபவமாக இருந்தது. நான் கொஞ்சம் தாமதமாக இங்கு வந்துள்ளேன். ஆனால், சுப்பர் ஸ்போர்ட்ஸ் சீரீஸ் பந்தயத்தின்போது கண்டிப்பாக இங்கு இருப்பேன். ஹெல்கேட் பைக் செலுத்தியது நன்றாக இருந்தது. அடுத்த முறை வரும்போது ஸ்போர்ட் பைக் எடுத்து வருவேன்' என்றார்.

சுப்பர்ஸ்போர்ட் உலக சம்பியன்ஷிப் மோட்டார் பைக் பந்தயத்தில் தோனியின் அணி பங்கேற்று வருகிறது. அதிவேக பைக் மற்றும் கார்களை செலுத்துவதில் அவர் தனி ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு பார்முலா 1 கார் பந்தயத்தை கொடியசைத்து தொடங்கி வைத்த இந்திய நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர், புத்தா பந்தயக் கள நிர்வாகி ஒருவர் செலுத்திய ரக்ஸி வாகனத்தில் உற்சாகமாக வலம் வந்தார். வேகப் பந்துவீச்சாளர் இஷாந்த் ஷர்மா அவரது ‘ஆடி ஆர்.எஸ்.5’ காரையும், விராத் கோஹ்லி தனது ஸ்போர்ட் மொடல் காரையும் செலுத்தி வந்தனர்.

தோனியிடம் மொத்தம் 11 விலையுயர்ந்த சுப்பர் பைக்குகள் இருக்கின்றன. இதில், சென்னையில் 2 பைக்குகளும், மும்பையில் 2 பைக்குகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை வரும்போதும், மும்பை செல்லும்போது இந்த பைக்குகளை அவர் பயன்படுத்துகிறார். இதுதவிர, ஹம்மர் உள்பட 9 கார்கள் தோனியிடம் உள்ளது.



# பிரேசில் - ரஷ்யா நட்புரீதியான காற்பந்து போட்டி சமநிலை



லண்டனில் நடந்த சர்வதேச நட்பு காற்பந்து போட்டியில் பிரேசில், ரஷ்யா அணிகள் மோதின. இதன் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்கவில்லை.

பின்னர் இரண்டாவது பாதியில் விக்டர் (73ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க ரஷ்யா முன்னிலை பெற்றது. இதற்கு கடைசி நிமிடத்தில் பிரேசிலின் பிரட் பதிலடி கொடுத்து அணியை தோல்வியில் இருந்து காப்பாற்றினார்.

கடைசி நேரத்தில் சூடுபிடித்த இந்த போட்டி முடிவில் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

# முதுகு வலியால் 11 கோடியை இழக்கும் கிளார்க்

புனே வாரியஸ் அணியை வழிநடத்துவதற்காக ஏலத்தில் எடுக்கப்பட்ட தொகையை விட 5 மடங்கு அதிகமாக 11 கோடி கொடுக்க அணி நிர்வாகம் முன்வந்தபோதும் தான் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கப்போவதில்லை என அறிவித்துள்ளார் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க்.

ஆறாவது ஐ.பி.எல்., தொடருக்கான ஏலத்தில் புனே வாரியர்ஸ் அணியால் ரூ. 2.12 கோடிக்கு வாங்கப்பட்டார் மைக்கேல் கிளார்க்.

முதுகுப்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக, டில்லி டெஸ்டில் பங்கேற்காத கிளார்க் நாடு திரும்பினார். இவரது காயத்துக்கு குறைந்தது 7 முதல் 10 வாரங்கள் ஓய்வு எடுக்க வேண்டும் என, வைத்தியர்கள் தெரிவித்தனர். அப்போது தான் எதிர்வரும் ஜுலை-ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஆஷஸ் தொடருக்காக முழுமையாக உடற் தகுதி பெற முடியும். இதையடுத்து, ஆறாவது ஐ.பி.எல்., தொடரில் இருந்து விலகுவது என, முடிவெடுத்துள்ளார் கிளார்க்.

புனே வாரியஸ் அணியின் தலைமைப் பொறுப்பிற்காக இவருக்கு ஏலத்தில் கொடுக்கப்பட்ட பணத்தை விட ஐந்து மடங்கு அதிகமாக ரூ. 11 கோடி வரை கொடுக்க புனே அணி நிர்வாகம் தயாராக இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் கிண்ணம் பல்கலைக்கழக அணி வெற்றி

வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 9வது ஆண்டாக நடத்தும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 8-வது போட்டியும், தொடரின் 102-வது போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணி, நியு ஸ்ரார் அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூ ஸ்ரார் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 39.03 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 123 ஓட்டங்களை பெற்றனர். கஜேந்திரா60. இளங்கோ 16, ஓட்டங் களை பெற்றனர். அச்சுதன் 4, விதுபாலா 3, ஜெயரூபன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்கலைக் கழக அணி 32.2 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களை பெற்றுள்ளது.

தசீன்தன் 56, தனன்ஜெயன் 22 ஓட்டங்களை பெற்றனர். நிஸாந்தன் 4, அருண் 2 இலக்கை கைப்பற்றினர்.

இச்சுற்றுப் போட்டியில் முதல் சுற்று லீக் முறையிலும், 2வது சுற்று நொக்அவுட் முறையிலும் நடத்தப்பட்டு வருகின்றது.

ஆகவே இரு அணிகளும் 2 வது சுற்றில் யாழ். பல்கலைக்கழக அணி, திருநெல் வேலி கிறிக்கெட் அணியுடனும், நியூஸ்ரார் அணி திருநெல்வேலி வைஎம்எச்ஏ அணியுடனும் போட்டியில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நியூஸ்ரார், திருநெல்வேலி வைஎம்எச்ஏ அணிகள் நாளை வெள்ளிக்கிழமை ஸ்கந்த வரேதயா கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. மேற்படி நடைபெற்ற போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 4 வது ஆண்டாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணி தெரிவு நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக அணி 7.2 புள்ளிகளையும், நியு ஸ்ரார் அணி 1.8 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.





சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் இடம் பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலயமும் மோதின. இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 19 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவாகியது. (23)

# சண்டிலிப்பாய் பிரதேச- கிரிக்கெட்; சுதுமலை இளைஞர் கழகம் சம்பியன்



(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டது.

இப் போட்டிகளில் சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் சம்பியனாவும், மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் ரன்னர் அப் ஆகவும் தெரிவாகியுள்ளது.

அரையிறுதியில் மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழக அணியை வென்று சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் இறுதிப் போட்டிக்கும்;

மற்றொரு அரையிறுதியில் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தை வென்று மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் இறுதிப் போட்டிக்கும் தெரிவானது.

இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் சார்பாக பிரபாகர் 32 ஓட்டங்களையும், பிரசாந்தன் 12 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் சர்பாக சுஜிதரன், சுபா, அஜந்தன், துவாரகன் ஆகியோர் தலா 1 இலக்கினைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 49 என்னும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பாடிய சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் 4.2 பந்துப்பரிமாற்றங்களில் 49 ஓட்டங்களைப் பெற்று போட்டியில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் துவா 28 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். (23)

# மாவட்ட மட்டக் கபடிச் சுற்றுப் போட்டி சண்டிலிப்பாய், தெல்லிப்பழை சம்பியன்



யா்ழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண் பெண்களுக்கான கபடிப்போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை துரையப்பா விளையாட்டரங்கில் காலை முதல் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான போட்டியில் 7 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அணிகள் பங்கு பற்றியிருந்தன.

ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியினரை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் மோதினர். இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியினர் 29:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவா கினர்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியினை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணியினர் மோதினர். இதில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியினர் 66:28 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகினர்.

இவ் இறுதிப்போட்டியில் தெல்லிப்பழையில் பிரதேச செயலக அணியினரை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியினர் மோதினர். இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 36:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டனர்.

பெண்களுக்கான போட்டியில் 6 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அணிகள் பங்கு பற்றியிருந்தன. பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் நெடுந்தீவு பிரதேச செயலக அணியினரை எதிர்த்து ஊர்காவற்துறை பிரதேச செயலக அணியினர் மோதினர். இதில் ஊர்காவற்துறை பிரதேச செயலக அணியினர் 35:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகினர்.

இரண்டாவது அரையிறுதிப்போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியினைரை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலக அணியினர் மோதினர்.

இதில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியினர் 48:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகினர். இவ் இறுதிப் போட்டியில் தெல்லிப்பழையில் பிரதேச செயலக அணியினரை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியினர் மோதினர். இதில் தெல்லிப்பழை பிரதேச செய்லக அணியினர் 57:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று யாழ். மாவட்ட மட்ட பெண்களுக்கான கபடி வெற்றிக் கேடயத்தினை தனதாக்கி கொண்டனர்.



# மயிரிழையில் தப்பிய...

என்ற விமானம் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றபோதே, இந்த விபத்து நேரிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தல விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில், பறவைக் கூட்டம் ஒன்று விமானத்தின் முன்புறத்தில் தாக்கியது. இதனால் விமானத்தின் முன்புறக் கண்ணாடிகள் சேதமடைந்தன.

விமானம் அவசரமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதும், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் மூத்த அதிகாரிகளும், விமானிகளும் சேதங்களை ஆய்வு செய்தனர்.

முன்புறக்கண்ணாடியில்விரிசல்ஏற்பட்டுள்ளதுடன், துப்பாக்கிக் குண்டுத்துளை போன்ற பல துளைகளும் காணப்பட்டதாக மூத்த விமானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அழுக்கத்தினால், கண்ணாடி உடைந்திருந்தால், விமானி வெளியே தூக்கி வீசப்பட்டிருப்பார் என்றும் அவர் கூறியுள்ளார். சம்பவத்தின் போது அந்த விமானத்தில் சுமார் 40 பயணிகள் இருந்தனர்.

அவர்களில் மத்தலவில் இருந்து கட்டு நாயக்க செல்வதற்காக ஏறிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 4 உறவினர்களும் அடங்குவர். எனினும் அந்த விமானம் மத்தலவில் பயணிகள் எவரையும் இறக்கி விடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பறவைகள், மற்றும் வனவிலங்குகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியிலேயே மத்தல விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு விமானங்களின் இரைச்சல் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு பெரும் தொந்தரவாக மாறியுள்ளது.

மத்தல விமான நிலையம் திறக்கப்படுவதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாகவும் இது போன்றதொரு பாரிய விபத்து ஏற்படுவது தவிர்க்கப்பட்டது.

பரீட்சார்த்தமாகத் தரையிறக்கப்பட்ட விமானம் ஒன்றின் மீது பறவைக் கூட்டம் மோதியதால், அந்த விமானத்தை செலுத்திய இளைய விமானி நிலைகுலைந்து போயிருந்தார்.

பின்னர் மூத்த விமானி ஒருவர் விமானத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததால் தான் அந்த விமானம் விபத்தில் இருந்து தப்பியது குறிப்பிடத்தக்கது. (ஏ-1)

# ஐ.நா.தீர்மா...

கூடுதல் தாக்கத்தை செலுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் மென்மையாக்கப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

மிகவும் சமனிலையானதும் நியாயமான முறையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவே தாம் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அர்த்தமுள்ள வகையில் நல்லிணக்க மற்றும் குற்[illegible] கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஏ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தை சீர்குலைக்க முயற்சிக்கப்படுகின்றது!

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கண்டி)

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்தை சீர்குலைப்பதற்கு சில உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் தீவிர முனைப்புக் காட்டி வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தின் பின்னர் வடக்கு தெற்கு மக்கள் அமைதியுடன் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

போலியான வதந்திகள் மற்றும் பிரசாரங்களுக்கு எவரும் ஏமாந்து விடக் கூடாது, சமாதானத்தைக் நிலை நாட்ட ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சில தரப்பினர் இலங்கை மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் அரசாங்கம் திடசங்கற்பத்துடன் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

# இலங்கை மீது...

என்றும் இந்த பிரேரணை மாற்றியமைக்கப்பட்டது.

இதற்கு இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தது. எனினும் இந்தப் பிரேரணையில் இலங்கையில் தமிழர் களுக்கு எந்த விளைவும் ஏற்படப் போவதில்லை என்று யூரோ ஏசியாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் வரையறைக்குள் இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான தீர்வு தொடர்ந்தும் தொலைதூர கனவாகவே நிலைபெறும் நிலைமையே தற்போது காணப்படுவதாகவும் யூரோ ஏசியா தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான சர்வதேச நாடகம் வருடா வருடம் ஐக்கிய நாடுகளின் மனிதஉரிமைகள்மாநாட்டில்அரங்கேற்றப்படுவதுதொடரும் என்றும் யூரோ ஏசியா சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

# இலங்கை தூதரை கைது...

கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பியுள்ளார்.

அதில் சிங்களவர்கள் இந்தியாவின் கலிங்கம், வங்கம் பகுதிகளின் பூர்வீக மக்கள் என்றும், சிங்கள மொழி, சமஸ்கிருதம், இந்தி மொழியோடு தொடர்புள்ளது என்றும் ஈழத் தமிழர்கள் வெறும் 12 சதவீதம் தான் என்றும், அவர்களின் பயங்கரவாதத்தை ஒடுக்கிய ராஜபக்ஷ அரசை பாராட்ட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள அரசன் ஸ்ரீ விஜயன், ஒரிசாவில் இருந்து வந்தவன் என்றும், இந்தியாவின் புத்த மதத்தை சிங்களவர்கள் பின்பற்றுவதாகவும் எனவே தமிழ்நாடு தவிர்த்த இந்திய மக்கள் சிங்களவர்களுக்கு உதவ வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்து, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, வைகோ நேற்று கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் காரியவசம், தன் அதிகார வரம்பை மீறி, இராஜீய உறவுகளின் எல்லைகளைத் தாண்டி, இந்தியாவில் வாழ்கின்ற ஒரிசா, மேற்கு வங்கம் உள்ளிட்ட வட மாநில மக்களிடம் தமிழர்களுக்கு எதிராகக் குரோதத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தும் நோக்கில், நச்சுக் கருத்துக்களை விதைத்துள்ளார்.

இந்தியா ஒருமைப்பாட்டுக்கு இதனால் ஆபத்து தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கிக்கொண்டு இருக்கிறது என்பதை உங்களுக்கு எச்சரிக்க வேண்டியது எனது கடமையாகும்.

இலங்கைத் தூதர் பிரசாத் காரியவாசம், இந்தியஒருமைப்பாட்டுக்கும் இறை யாண்மைக்கும் வேட்டு வைக்க முனைந்துள்ளதால், இந்தியக் குற்றவியல் சட்டம் 124ஏ பிரிவின் கீழ் இலங்கைத் தூதர்மீது உடனடியாக வழக்குப் போட்டு கைது செய்து, சிறையில் அடைக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதில் இந்திய அரசு மேற்கொள்ளும் செயல்பாடுதான், நாட்டின் ஒற்றுமைக்கு, காலம் விடுத்துள்ள அறைகூவலுக்கு பதிலாக அமையும் என்பதை வரலாறு பதிவு செய்யும்.

இவ்வாறு, வைகோ தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# தமிழீழத்துக்காக...

அவர் முன்மொழிந்த தீர்மானத்தில், தமிழன் யாருக்கும் தாழாமல், யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல், எவராலும் சுரண்டப்படாமல் எவருக்கும் எஜமானாக இல்லாமல், உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை என்றார் பேரறிஞர் அண்ணா.

பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப இலங்கை வாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இலங்கை நாட்டை "நட்பு நாடு" என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கைப் போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன்விசாரணை நடத்திடவும், இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில் போர்க்குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும், தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும், ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு "தனி ஈழம்" குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொதுவாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் தீர்மானத்தினை கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசைக் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என அத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அத்துடன், இத்தீர்மானத்தினை சட்டசபை ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டதையடுத்து இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பிரிட்டன்...

கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளை அவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (எ-11)

# அதிகார...

புரட்சி மூலம் அதிகாரம் கைப்பற்றப்படவில்லை.

நாட்டில் இருந்த பயங்கரவாதம் தற்போது முடிவுக்கு கொண்டு வரப்பட்டுவிட்டது. தற்போது தேவையான அரசியல் சுதந்திரம் உள்ளது. வடக்கில் தெற்கில் எவருக்கும் அச்சமின்றி அனைத்து இடங்களுக்கும் செல்ல முடியும்.

உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படுகின்றது. தாம் விரும்பிய எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்கமுடியும். அப்படியானால் அதிகாரத்தைப் பரவலாக்குவது என்பது என்ன?

இது மீண்டும் நாட்டை துண்டுகளாக பிளவுப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கையாகும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார். (எ-11)

# புலிகளின் மூத்த தள...

காவலர்களாக பிரபாகரன் நியமித்திருந்தார். முள்ளிவாய்க்காலில் இறுதி கட்ட போர் நடந்த போது அந்த 5 பாதுகாவலர்களையும் பிரபாகரன் வெளிநாட்டுக்கு தப்ப வைத்தார். அவர்களில் ஒரு பாதுகாவலர் கடந்த வாரம் ஐ.நா. சபையில் இலங்கைக்கு எதிராக ஈழத் தமிழர்கள் நடத்திய போராட்டத்தில் பங்கேற்க வந்திருந்தார் என்றார். பாலச்சந்திரன் கொல்லப்பட்டது தொடர்பாக சில புதிய தகவல்களை அவர் வெளியிட்டார்.

அவர் கூறியதாவது, பாலச்சந்திரன் நன்றாக படிப்பான். புத் தகம் வாசிப்பதில்தான் அவன் அதிக நேரத்தை செலவிடுவான். அவனுக்கு பெரும்பாலும் தனிமையில் இருப்பதுதான் பிடிக்கும். சிறு வயதில் இருந்தே துப்பாக்கி உள்ளிட்ட ஆயு தங்களைப் பார்த்தாலே அவனுக்கு பிடிக்காது.

சார்லஸ் போன்று அவனிடம் போராட்ட குணம் இருந்தது இல்லை. தலைவர் எங்களை ஈழத்தில் இருந்து வெளிநாட்டுக்கு அனுப்பிய போது இராணுவ வீரர்கள் ஒவ் வொருவரிடமும் தலைவர் குடும்பத்தினரின் படங்கள் இருப்பதை அறிந்தோம்.

தலைவர் குடும்பத்தை முற்றிலும் அழிக்க வேண்டும் என்று அவர்கள் வெறி கொண்டு அலைந்தனர். அவர்களுக்கு கருணா பக்க பலமாக இருந்தார்.

பாலச்சந்திரன் உயிருடன் பிடிபட்டபோது, அங்கு கருணா இருந்துள்ளார். அவர்தான் பாலச்சந்திரனை பிரபாகரன் மகன் என்று அடையாளம் காட்டியுள்ளார்.

முதலில் எங்களுக்கு இது தெரியவில்லை ஜெனீவாவில் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் சந்தித்து பேசிய போதுதான் கருணாவின் துரோகம் தெரிந்தது.

பாலச்சந்திரனுக்கு போர் பற்றி எதுவுமே தெரியாது. அப்பாவியான அந்த பாலகனுக்கு ஏதோ சாப்பிட கொடுத்து விட்டு சுட்டிருக்கிறார்கள்.

ஒரு பிஞ்சு உயிரை அருகில் நின்று சுட்டு பறித்தவர்கள் எந்தளவுக்கு கொடியவர் களாக இருப்பார்கள் என்று பார்த்து கொள்ளுங்கள்.

ஆனால் எங்கள் தலைவர் தீர்க்கதரிசி. எதிர்காலத்தில் உலக மக்களின் எழுச்சி தமிழ் ஈழத்தைப் பெற துணை நிற்கும் என்றார். தற்போது அதுதான் நடக்க தொடங்கியுள்ளது.

ஈழத்தில் இருந்து வெளியேறிய நாங்கள் தற்போது ஒன்று சேர தொடங்கியுள்ளோம். முக்கிய மூத்த தலைவர்கள் பலர் உயிருடன் இருப்பது எங்களுக்கே இப்போதுதான் தெரிய வந்துள்ளது.

நாங்கள் ஆளுக்கொரு திசையாக பிரிந்த போது மீண்டும் தலைவரிடம் இருந்து உத்தரவு வரும். அதுவரை பொறுமையாக இருங்கள்என்றனர். இப்போது நாங்கள் அந்த உத் தரவை எதிர் பார்த்து காத்து இருக்கிறோம். இவ்வாறு அந்த விடுதலைப்புலி பாதுகாவலர் கூறினார். (எ-11)


**2013 A/L**

**விவசாய விஞ்ஞானம் (08)**

**Paper Class**

**சனி, ஞாயிறு 11.00 மணி**

**வை.சசிகுமார்.**

**DMI, Jaffna**

(சி-2813)



## வேலைவாய்ப்பு

சந்தைப்படுத்தல் துறையில் தன்னிகரற்ற இடத்தைப் பிடித்திருக்கும் **Innovage International Company** மீண்டும் ஓர் வாய்ப்பை யாழ் மண்ணிற்கு வழங்குகிறது. புதுவருடத்தை முன்னிட்டு சாதாரண கல்வி பயின்றவர்களுக்கும் நிரந்தர ஊதியத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பளிக்க முன்வந்துள்ளது. செய்யவேண்டியது:-

✪ 25 வயதிற்குள்ளிருத்தல் வேண்டும் ✪ O/L கற்றிருத்தல் போதுமானது

**குறிப்பு:** கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், வடமராட்சி, தென்மராட்சி போன்ற இடங்களில் உள்ளோருக்கு மாத்திரம் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

அழைக்க வேண்டிய இலக்கம்:-

0778330074, 0217212045, 0772151014

(1908)



தற்போது யாழ் நகரில்...




## Why Choose BCAS for Law?

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.

> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது

> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.

> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.

> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :

16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk

Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747

Macro Ads (சி-2814)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org